بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ   نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ   وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 24&25

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1446 துல்ஹஜ் 15-22 ★ஹிஜ்ரி ஷம்ஸி 1406 - இஹ்ஸான் 12 - 19 ★ 12 - 19 ஜூன் 2025

## அல்லாஹ்வின் கட்டளை

وَلَا تَحۡلِقُوۡا

رُءُوۡسَکُمۡ

حَتّٰی یَبۡلُغَ الۡهَدۡیُ مَحِلَّہٗ ؕ

பொருள்

**அந்தக் குர்பானி தனக்குரிய இடத்தை அடையும் வரை உங்கள் தலைகளைச் சிரைத்துக் கொள்ளாதீர்கள்.**

(அல்பக்கரா: 197)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**முஸ்லிமாக ஆகுவது என்பது எளிதல்ல**
**இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிலையும் இஸ்லாத்தின் முன்மாதிரியையும் உங்களுக்குள் உருவாக்கிக் கொள்ளாத வரை நிம்மதியடைந்து விடாதீர்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### மகத்தான நற்பேறை பெறுவதற்கான வழி

மகத்தான நற்பேறை பெறுவதற்காக அல்லாஹ் ஒரு வழியை மட்டுமே வைத்துள்ளான்.அதாவது இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கீழ்ப்படிதலை மேற்கொள்ள வேண்டும். இதனை சூரா ஆலி இம்ரான், வசனம் 32-ல் இறைவன் தெளிவாக கூறியிருக்கின்றான்.

பொருள்: அல்லாஹ்வும் உங்களை நண்பனாக ஆக்கிக் கொள்வதற்காக, வாருங்கள்! என்னை பின்பற்றுங்கள் என்று நீர் கூறுவீராக! சம்பிரதாயமாக இறை வணக்கம் செய்யுங்கள் என்பது இதன் பொருளன்று. மார்க்கத்தின் உண்மைத்துவம் இதுவே என்றால் பின்னர் தொழுகையின் பொருள் என்ன? நோன்பு என்பது என்ன விஷயம்? சுயமே ஒரு விஷயத்திலிருந்து தடுத்துக் கொள்வதும், சுயமே செய்து கொள்வதும் அன்று. இதன் பெயர் மட்டுமே இஸ்லாம் கிடையாது. இஸ்லாம் என்பதோ இதுவாகும். அதாவது ஆட்டினைப் போன்று தலையை வைத்துவிடுதல் ஆகும். உதாரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது மரணமும், எனது வாழ்வும், எனது தொழுகையும், எனது தியாகமும் அல்லாஹ்வுக்கே உரியன. மேலும், எல்லாரையும் விட முதலில் நான் எனது கழுத்தை (இறை வழியில்) வைத்து விடுகின்றேன். இந்தப் பெருமை இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களுக்கே முதன்மையானதாக இருக்கின்றதே தவிர ; இப்ராஹீம் அவர்களுக்கும் கிடையாது. வேறு எவருக்கும் கிடையாது. இது

كُنْتُ نَبِيًّا وَّآدَمُ بَيْنَ الْمَاءِ وَالطِّيْنِ

என்பதன் பக்கமே சுட்டி காட்டுகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா நபிமார்களுக்கும் பிறகே தோன்றினார்கள் என்றாலும் கூட எனது மரணமும், வாழ்வும் அல்லாஹ்வுக்கே உரியது ஆகும் என்ற

.இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்...

**ஏழைகள் கருத்தில் கொள்ளப்படுவது என்பது சமுதாய முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வழிமுறையாகும். செல்வந்தர்கள் ஏழைகளின் முன்னேற்றம் வெற்றி மற்றும் நலனிற்காக தமது செல்வங்களின் ஒரு பகுதியை செலவிட்டு கொண்டிருக்க வேண்டும்**

وَالَّذِيْنَ هُمْ لِلزَّكٰوةِ فٰعِلُوْنَ

(23:05)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு ஏழைகளின் துயரங்களை குறித்து எந்த அளவுக்கு உணர்வு இருந்தது என்றால், ஹதீஸில் இவ்வாறு வருகின்றது: அதாவது, ரமலான் மாதம் வரும்போது, கண்ணியத்திற்குரிய இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எவ்வளவு அதிகமாக ஏழைகளுக்கு மத்தியில் தானதருமங்கள் வழங்குவார்கள் என்றால் அதனை ஒரு சூறாவளிக் காற்றுடன் ஒப்புமைப்படுத்தினால் கூட அதுவும் ஒரு குறைபாடுடைய ஒப்புமையாக இருக்கும். இதே போன்று ஒருமுறை சில செல்வங்கள் வந்தன. அவற்றை அன்னார் (ஸல்) ஏழைகளுக்கு பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். ஆனால், ஒரு தீனார் எப்படியோ எஞ்சி விட்டது. மேலும் அது பிரித்துக் கொடுக்கப்படாமல் போய்விட்டது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது திடிரென அன்னாருக்கு அந்த தீனார் நினைவுக்கு வந்துவிட்டது. அன்னார் (ஸல்) தொழுது முடித்து விட்ட பிறகு அன்னார் (ஸல்) ஸஹாபிகளுடன் அமர்ந்து உரையாடுவதற்கு பகரமாக அன்னார் (ஸல்) வேக வேகமாக (வீட்டின்) உள்ளே சென்றுவிட்டார்கள்.

ஸஹாபிகள் கூறுகின்றனர்: அந்நேரத்தில் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடத்தில் எப்படிப்பட்ட வேதனை காணப்பட்டது என்றால், அன்னார் (ஸல்) எங்களது கழுத்துகளை தாண்டி சென்றவாறு உள்ளே சென்றார்கள். அன்னார் (ஸல்) திரும்பி வந்தபோது, கூறினார்கள்: செல்வங்களை பங்கிட்டு கொடுத்துக் கொண்டிருந்தபோது ஒரு தீனார் எப்படியோ கீழே விழுந்து விட்டது. நான் தொழுது கொண்டிருக்கும் போது அது நினைவுக்கு வந்து விட்டது. அப்போது எனது உள்ளம் இந்த எண்ணத்தால் நிம்மதியிழந்து விட்டது. அதாவது ஒருவேளை எனக்கு மரணம் நிகழ்ந்து, ஏழைகளுக்கான இந்த செல்வம் எனது வீட்டிலேயே எஞ்சியிருந்துவிட்டால் நான் இறைவனுக்கு என்ன பதில் கூறுவேன்? எனவே நான் உடனடியாக உள்ளே சென்றேன்; மேலும் அதனையும் பங்கிட்டுக் கொடுப்பதற்கு வழங்கி விட்டேன் என்ற எண்ணம் வந்தது.

இதே போன்று ஹதீஸ்களில் வருகின்றது; ஒருமுறை அன்னாரிடம் சிறிது பேரீத்தம் பழங்கள் ஸதக்காவாக கொண்டு வரப்பட்டன. ஹஸ்ரத் இமாம் ஹஸன் (ரலி) அவர்கள் அந்நேரத்தில் சிறு பிள்ளையாக இருந்தார்கள். மேலும் அன்னாருக்கு அந்நேரத்தில் இரண்டரை வயது இருந்திருக்கும். அன்னார் ஒரு பேரீத்தம் பழத்தை எடுத்து வாயில் போட்டு விட்டார்கள். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அதனை கண்டபோது, அன்னார் (ஸல்) உடனடியாக அவரது வாயில் விரலை நுழைத்து அந்த பேரீத்தம் பழத்தை எடுத்து வெளியே வீசிவிட்டார்கள். கூறினார்கள்: இது இறைவனின் ஏழை அடியார்களுக்கு உரியதாகும்.

ஒருமுறை அன்னாருக்கு இந்த விஷயம் தெரியவந்தது. அதாவது செல்வந்தரான அன்னாரின் ஒரு ஸஹாபி ஹஸ்ரத் ஸஅத் (ரலி) அவர்கள் வேறு சில நபர்களிடத்தில் தமது மேன்மையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள் என்பது அன்னாருக்கு தெரிய வந்தது. இறைத் தூதர் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தைக்

.இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம்...

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## போர்கள் மற்றும் படையெடுப்புகள் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உரைகள்

மூத்தா போரின் நிலைமைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எடுத்துரைத்தார்கள். மேலும் கூறினார்கள்: அல்லாஹ் எனக்காக பூமியை உயர்த்தினான்; எந்த அளவிற்கு என்றால் நான் அந்தப் போர்க் களத்தைக் கண்டேன்

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மூத்தா நாளன்று எனது கையில் ஒன்பது வாள்கள் உடைந்தன. வெறும் ஒரேயொரு ஏமனின் தடித்த வாள் மட்டும் எனது கையில் இருந்து விட்டது. அல்லாமா முஹம்மத் பின் யூஸுஃப் அவர்கள் கூறுகிறார்கள்: இந்த அறிவிப்பில் இருந்து முஸ்லிம்கள் இணைவைப்பாளர்களை அதிகமாகக் கொன்றார்கள் என்பது தெரிய வருகிறது. இல்லையென்றால், அவர்களால் இணைவைப்பாளர்களிடமிருந்து தப்பியிருக்க முடியாது. முஸ்லிம்களின் எண்ணிக்கை மூவாயிரமாகவும், அதே வேளையில் இணை வைப்பாளர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்துக்கும் அதிகமாகவும் இருந்தது

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மூத்தா போரில் முஸ்லிம்கள் சிலர் ஷஹீதாக்கப்பட்டார்கள். முஸ்லிம்களுக்கு இணை வைப்பாளர்களின் சிறிது பங்கு போர்ச் செல்வமாக கிடைத்தது.அந்தப் பொருளில் ஒரு மோதிரமும் இருந்தது. ஒரு நபர் அதை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பித்தார். நான் அவரிடம், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மோதிரத்தை எனக்கு வழங்கி விட்டார்கள் என்று கூறினேன்

இந்தியா மற்றும் பாகிஸ்தானிற்கிடையிலான போர்ச் சூழலின் பின்னணியில் சமாதானம் மற்றும் அமைதிக்கான தூதுச் செய்தியை பரப்புவதற்கும், பாலஸ்தீன மக்களுக்காக துஆ செய்வதற்கும் அஹ்மதிகளுக்கு அறிவுரை

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 09 மே 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1406 ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **09 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

மூத்தா போர் பற்றிய கூடுதல் விவரம் இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் அவ்ஃப் பின் மாலிக் அஷ்ஜயீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுடன் புறப்பட்ட மக்களுடன் பயணத்தில் கலந்து கொண்டேன். ஏமன் வாழ் மக்களில் ஒருவர் என்னை சந்தித்தார். அவரிடம் வாள் மட்டும்தான் இருந்தது. முஸ்லிம் ஒருவர் ஒட்டகத்தை அறுத்தார். அந்த நபர் அவரிடமிருந்து சிறிது தோலைக் கேட்டார். அவர் அதை அவருக்குக் கொடுத்துவிட்டார். அதாவது, அந்த ஒட்டகத்தின் தோலைக் கேட்டார். அவர் அதைக் கேடயம் போல் ஆக்கிக் கொண்டார்.

பிறகு, கூறுகிறார்கள்: நாங்கள் பயணம் புறப்பட்டோம். ரோமானிய படையுடன் நாங்கள் மோதினோம். அவர்களில் ஒருவன் பழுப்பு நிற குதிரையின் மீது உட்கார்ந்திருந்தான். அதன் மீது பொன்னால் ஆன சேணமும் பொன்னால் ஆன ஆயுதங்களும் இருந்தன. அந்த ரோமானியன் முஸ்லிம்களைக் கூவி அழைத்தான்.அந்த ஏமன் நபர் பாறைக்குப் பின்னால் இருந்து அவன் பக்கம் வந்தார். எதிரியின் குதிரையின் கால்களை வெட்டிவிட்டார். போர் நடந்தது. ரோமானியன் கீழே விழுந்துவிட்டான். அவர் வாளை எடுத்துக் கொண்டு அவன் மீது ஏறி உட்கார்ந்து அவனைக் கொன்று விட்டார். அவனுடைய குதிரையையும், ஆயுதங்களையும் எடுத்துக் கொண்டார்.

அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கியதும், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் ரோமானியனைக் கொன்ற அந்த நபருக்கு செய்தி அனுப்பி, அவரிடமிருந்து சில பொருள்களை வாங்கிக் கொண்டார்கள். அதாவது, பொருள்களை நீ ஒப்படைத்து விடு என்றார்கள். ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் வந்தேன். அல்லாஹ் பொருள்களைப் பற்றி என்ன தீர்ப்பு வழங்கியுள்ளான்? என்று உங்களுக்குத் தெரியுமா? எனக் கேட்டேன்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் புதிதாக முஸ்லிம் ஆகியிருந்தார்கள். எனவே (அவ்ஃப்) அவர்கள், அது கொன்றவருக்கு சொந்தம். அதாவது எதிரியின் அந்தப் பொருள், போர்ச் செல்வம் எவர் எதிரியைக் கொன்றாரோ அவரிடமே இருக்கும் என அல்லாஹ் தீர்ப்பு வழங்கியுள்ளது இவர்களுக்குத் தெரியாது போலும் என நினைத்தார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், ஆம்! எனக்குத் தெரியும். ஆனால், நான் அதை அதிகமானதாகக் கருதினேன் எனக் கூறினார்கள்.அதாவது அவருக்குக் கிடைக்க வேண்டியிருந்ததை விட அவர் எடுத்துக் கொண்டது அதிகமாக இருந்தது. இவர்கள் கூறுகிறார்கள்: நான் அவர்களிடம், இந்தப் பொருள்களை அந்த நபருக்குத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்; இல்லையென்றால் நான் இதை கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களிடம் பணிவுடன் எடுத்துக் கூறுவேன் என்று கூறினேன். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் பொருளைத் திருப்பித் தர மறுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பிறகு, இவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவைக்குச் சென்றார்கள் - நான் அந்த நபரின் நிகழ்வைப் பற்றி பணிவுடன் கூறினேன். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் நடந்து கொண்ட தோரணையையும் பணிவுடன் எடுத்துக் கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம், நீர் என்ன செய்தீர்? எனக் கேட்டார்கள். நான் அதை மிகுதியான பொருளாகக் கருதினேன்; நான் அதிகமானதாக நினைத்தேன். எனவே நான் அதிலிருந்து சிலவற்றைத் திரும்ப வாங்கிக் கொண்டேன் என்று கூறினார்கள்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் எதை அவரிடமிருந்து வாங்கினீரோ அதைக் திருப்பிக் கொடுத்து விடுவீராக! எனக் கூறினார்கள். ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: காலித் இப்பொழுது இதை வாங்கி பாருங்களேன் என்று நான் கூறினேன். அதாவது இப்பொழுது நீங்கள் இதை எப்படி வாங்குவீர்கள்?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தீர்ப்பு கூறிவிட்டார்கள். எனவே திருப்பித் தந்து விடுங்கள். இதைத் திருப்பித் தருமாறு நான் உங்களிடம் கூறவில்லையா? என்று கேட்டேன்.

எவ்வாறாயினும், ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களிடம் இதைக் கூறிக் கொண்டிருந்த போது, பெருமானார் (ஸல்) அவர்கள் அதைக் கேட்டு விட்டார்கள். பெரும் கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள், என்ன ஆயிற்று? எனக் கேட்டார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் பிறகு நடந்தது அனைத்தையும் கூறினேன்.

முதலில் இந்த விஷயத்தை முழுவதுமாக கூறியிருக்கவில்லை. இப்பொழுது கூறினார்கள்: இதைத் திருப்பித் தாருங்கள் என்று நான் அவர்களிடம் கூறினேன். ஆனால், அவர்கள் செய்யவில்லை.

இதனால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விருப்பமின்மையை வெளிப்படுத்தினார்கள். ஹுஸூர் (ஸல்) அவர்கள், காலிதே! அவருக்கு எல்லாப் பொருள்களையும் திருப்பிக் கொடுக்காதீர்! என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் முதலில் திருப்பிக் கொடுத்து விடுவீராக! எனக் கூறியிருந்தார்கள். இப்பொழுது திருப்பிக் கொடுக்கக் கூடாது எனக் கூறினார்கள். பிறகு, நபி பெருமானார் (ஸல்)

அவர்கள் தர்பிய்யத் வழங்குவதற்காக இவ்வாறு கூறினார்கள்.

ஒரு விவகாரத்தின் தெளிவான பகுதி உங்கள் பங்கில் இருந்து, அதன் அசுத்தம் அவர்கள் மீது இருக்கும் நிலையில் எனது அமீர்மார்களை விட விரும்புகிறீர்களா? அமீர் ஆன பிறகு, நீங்கள் உங்கள் முடிவு சரியானது எனக் கூறியதும், அதன் தூய்மையும், பரிசுத்தமும் உங்களிடம் வந்து விட வேண்டும் என்றும், அதன் தீய அம்சம் ஏதும் இருந்தால், அது அமீர்மார்களுக்குக் கிடைத்து விட வேண்டும் என நினைப்பதும் ஆகிய இது மிகவும் தவறான விஷயம் ஆகும். நீர் இப்பொழுது எனக்கு விஷயத்தைக் கூறியதும் நான் இப்பொழுது முதல் கட்டளையைத் திரும்பப் பெறுகிறேன். காலித் என்ன செய்தாரோ? அதனை சரியாகத்தான் செய்தார்.

இப்பொழுது இங்கு அமீருக்கான கண்ணியத்தை நிலைநாட்ட வேண்டியிருந்தது. எனவே ஹுஸூர் (ஸல்) அவர்கள், நீங்கள் முதலில் தவறான வேலையை செய்தீர்கள் என்று அமீரை நீர் குத்திக் காட்டுகிறீர் என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் முதல் தீர்ப்பைத் திரும்பப் பெற்றார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மூத்தா போரில் முஸ்லிம்கள் சிலர் ஷஹீதாக்கப்பட்டார்கள். முஸ்லிம்களுக்கு இணை வைப்பாளர்களின் சிறிது பங்கு போர்ச் செல்வமாக கிடைத்தது. அந்தப் பொருளில் ஒரு மோதிரமும் இருந்தது. ஒரு நபர் அதை நபி பெருமானார் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பித்தார். நான் அவரிடம், பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மோதிரத்தை எனக்கு வழங்கி விட்டார்கள் என்று கூறினேன். ஹஸ்ரத் ஃஹுஸைமா பின் ஃஸாபித் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் மூத்தா போரில் கலந்து கொண்டேன். ரோமானியர்களில் ஒருவன் என்னை ஒற்றையாகப் போர் புரிவதற்கு அழைத்தான். நான் அவனைக் கொன்று விட்டேன். அவன் தலைக்கவசம் அணிந்திருந்தான். அதில் மாணிக்கங்கள் பதிக்கப்பட்டிருந்தன. நான் அந்த மாணிக்கங்களை எடுக்க நினைத்தேன். நான் அவற்றை எடுத்துக் கொண்டேன். நான் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு வந்தபோது, நான் மாநபி (ஸல்) அவர்களிடம் மாணிக்கங்களை சமர்ப்பித்து விட்டேன். பெருமானார் (ஸல்) அவர்கள் அவற்றை எனக்கு வழங்கிவிட்டார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் உஸ்மான் கனீ (ரலி) அவர்களின் காலத்தில் இவற்றை ஆயிரம் தீனாருக்கு விற்றேன். இதைக் கொண்டு நான் ஒரு பேரீத்தம் பழத்தோட்டத்தை வாங்கினேன். அல்லாமா இப்னு கஸீர் எழுதுகின்றார்கள்: முஸ்லிம்கள் போர்ச் செல்வங்களும் பெற்றார்கள் என்பது இந்த அறிவிப்புகளில் இருந்து தெளிவாகிறது. தோல்வி அடையாதது மட்டுமல்ல ; போர்ச் செல்வங்களைப் பெற்றிருந்தார்கள். தோல்வி என்ற பேச்சுக்கே இடம் இருக்கவில்லை. இதுவோ ஒரு நுட்பமான இராணுவ செயலாக இருந்தது. அதை அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். அதனால்தான் அவர்கள் திரும்பி வந்து விட்டிருந்தார்கள். எவ்வாறாயினும், கூறுகிறார்கள்:

அவர்கள் அவர்களுடைய தலைவர்களிமிருந்து பொருள்களை எடுத்துக் கொண்டார்கள். அவர்களுடைய அமீர்களைக் கொன்று விட்டார்கள்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மூத்தா நாளன்று எனது கையில் ஒன்பது வாள்கள் உடைந்தன. வெறும் ஒரேயொரு ஏமனின் தடித்த வாள் மட்டும் எனது கையில் இருந்து விட்டது. அல்லாமா முஹம்மத் பின் யூஸுஃப் அவர்கள் கூறுகிறார்கள்: இந்த அறிவிப்பில் இருந்து முஸ்லிம்கள் இணைவைப்பாளர்களை அதிகமாகக் கொன்றார்கள் என்பது தெரிய வருகிறது. இல்லையென்றால், அவர்களால் இணைவைப்பாளர்களிடமிருந்து தப்பியிருக்க முடியாது. முஸ்லிம்களின் எண்ணிக்கை மூவாயிரமாகவும், அதே வேளையில் இணை வைப்பாளர்களின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்துக்கும் அதிகமாகவும் இருந்தது. இந்த ஒரு விஷயமே முஸ்லிம்களின மேன்மைக்கு நிரந்தரமான சான்றாகும். அல்லாஹ்வே நன்கறிவான்!

இப்னு இஸ்ஹாக் அவர்கள் இவ்வாறு அறிவித்துள்ளார்கள்:

ஹஸ்ரத் குத்பா பின் கத்தாதா (ரலி) அவர்கள் முஸ்லிம்களின் வலப்புறப்படையின் தலைவராக இருந்தார்கள். அவர்கள் மாலிக் பின் ராஃபிலா மீது தாக்குதல் கொடுத்தார்கள். அவன் கிறிஸ்தவ காட்டரபிகளின் தலைவனாக இருந்தான். அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் குத்பா (ரலி) அவர்கள் இதில் பெருமிதம் கொண்டவாறு அரபுக் கவிதைகளில் இவ்வாறு கூறிவந்தார்கள்: நான் ராஃபிலா பின் இராஷின் மகன் மீது எப்படி ஈட்டி எறிந்தேன் என்றால், அது அவனுக்குள் தூரம் வரை சென்று விட்டிருந்தது. பிறகு, அந்த ஈட்டி உடைந்து விட்டது. நான் அவனது கழுத்தில் ஆழமாக வாள் வீசியபோது, முன் இருக்கக் கூடிய மரமான “ஸலம்” எனும் மரத்தின் கிளை வளைந்து விடுவது போன்று அவன் வளைந்து விட்டான். நாங்கள் அவனுடைய சிறிய தந்தை வழிப் பெண்களை விலங்குகளை ஓட்டுவது போன்று ஓட்டி வந்தோம்.

ஹஸ்ரத் அஸ்மா பின்த் அமீஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எந்த நாளில் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களும்,. அவர்களுடைய தோழர்களும் ஷஹீதானார்களோ அன்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் எங்கள் வீட்டிற்கு வருகை தந்தார்கள். நபி (ஸல்) அவர்கள், ஜஃபரின் மகன்களை என்னிடம் அழைத்து வாருங்கள்! என்று கூறினார்கள். நான் அவர்களை அன்னார் முன் நிறுத்தினேன். ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவர்களைத் தம்முடன் அணைத்துக் கொண்டார்கள். அன்னாருடைய கண்களிலிருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது.

அப்போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! என் தாய், தந்தையர் தங்கள் மீது அர்ப்பணம்! தாங்கள் ஏன் அழுகின்றீர்கள்? தங்களுக்கு ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் பற்றியும் அவர்களுடைய தோழர்களைப் பற்றியும் எதுவும் தெரிய வந்ததா? என நான் பணிவுடன் கேட்டேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆம்! இன்று அவர்களுடைய தலைகளின் மீது ஷஹாதத் எனும் மகுடம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கூறுகிறார்கள்: நான் எழுந்து அழத் துவங்கினேன். பெண்கள் என்னுடன் ஒன்று திரண்டு விட்டார்கள். ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தம் வீட்டாரிடம் சென்று விட்டார்கள். ஜஃபரின் குடும்பத்தார் மீது கவனம் செலுத்தாமல் இருந்து விடாதீர்கள்; அவர்களுக்காக ஏதாவது உணவு சமைத்திடுங்கள்; இன்று அவர்களின் கணவரின் மரணத்தில் அவர்கள் மூழ்கி விட்டார்கள்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். அதாவது இன்று அவர்களுடைய வீட்டுக்கு உணவு அனுப்பி வையுங்கள் என்று மக்களுக்கு வலியுறுத்தினார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது சொற்பொழிவு மேடைக்கு முன் வருகை தந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஸைது (ரலி), ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) மற்றும் இப்னு ரவாஹா (ரலியல்லாஹூ அன்ஹூமா) ஆகியோர் ஷஹீதான செய்தியைத் தெரிவித்தார்கள். அவர்கள் அந்த நாளில்தான் ஷஹீதாகியிருந்தார்கள். ஆனால், வெளிப்படையில் அவர்களது ஷஹாதத் செய்தி வந்திருக்கவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்பொழுது ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் கொடியை ஏந்திக் கொண்டார்கள்– அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் இதைக் கூறிக் கொண்டிருந்தபோது - அவர்கள் ஷஹீது ஆகிவிட்டார்கள். பிறகு ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் கொடியை ஏந்திக் கொண்டார்கள். அவர்களும் ஷஹீது ஆகிவிட்டார்கள். பிறகு, இஸ்லாத்தின் கொடியை ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் ஏந்திக் கொண்டார்கள். அவர்களும் ஷஹீது ஆகிவிட்டார்கள். அன்னாருடைய கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. எதுவரை என்றால், இஸ்லாத்தின் கொடியை அல்லாஹ்வின் வாள்களில் ஒரு வாள் பிடித்துக் கொண்டது. அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான்.

ஓர் அறிவிப்பில் வருகிறது; ஹஸ்ரத் யாலா பின் உமையா (ரலி) அவர்கள் மூத்தா மக்களை ஒரு கை பார்த்த பிறகு, பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். நீர் விரும்பினால் நீர் எனக்கு சொல்வீராக ; நீர் விரும்பினால் நான் உமக்கு அவர்களைப் பற்றி கூறிவிடுகின்றேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எனக்கும் அல்லாஹ் செய்தியைத் தெரிவித்தான்; நீர் முதலில் சொல்ல விரும்புகிறீரா? அல்லது என்ன ஆனது? என்று நான் உமக்கு சொல்லட்டுமா? என்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் எனக்குக் கூறுங்கள் என்று அன்னார் (ஸல்) பணிவுடன் கேட்டுக் கொண்டார்கள்.

நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு அனைத்து நிகழ்வுகளையும் கூறிவிட்டார்கள். அதைக் கேட்ட அவர்கள், தங்களை உண்மையுடன் அனுப்பிய அந்த இறைவனின் மீது ஆணையாக! ஹுஸூர் (ஸல்) அவர்கள் அந்த நிகழ்வுகளில் ஒரு சொல்லைக் கூட விடவில்லை என்று பணிவுடன் கூறினார்கள். மாநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் எனக்காக பூமியை உயர்த்தினான். எதுவரை என்றால், நான் அவர்களைப் போர்க்களத்தில் பார்த்தேன். நான் கனவில் அவர்களைப் பார்த்தேன். அவர்கள் தங்கப் படுக்கைகளில் இருந்தார்கள். நான் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹாவின் படுக்கையைப் பார்த்தேன். அவரது படுக்கையில் சற்று கோணல் இருந்தது. அதற்கு என்ன காரணம்? என்று கேட்டேன். இவர்கள் இருவரும் நேராகச் சென்றார்கள். ஆனால், அப்துல்லாஹ் சற்று தயங்கினார். பிறகு முன்னால் சென்றார் என்று எனக்குக் கூறப்பட்டது.

அவர்களது தயக்கத்தைப் பற்றி

சென்ற குத்பாவில் கூறப்பட்டிருந்தது. அதாவது, நான் சண்டையிட வேண்டாம் என முதலில் நினைத்தேன் என்று அவர்களே கூறியிருந்தார்கள்.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஜஃபர், ஸைது மற்றும் இப்னு ரவாஹா ஆகியோர் எனக்கு முன்னால் நிறுத்தப்பட்டார்கள். அவர்கள் முத்தால் ஆன கூடாரத்தில் இருந்தார்கள். நான் ஹஸ்ரத் ஸைது (ரலி) மற்றும் இப்னு ரவாஹைப் பார்த்தேன். அவர்களுடைய கழுத்தில் வளைவு இருந்தது. ஆனால், ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) நேராக இருந்தார்கள். அவர்களிடம் வளைவு இருக்கவில்லை. எனக்குக் கூறப்பட்டதாவது, இவர்கள் இருவருக்கும் மரணம் வந்துவிட்டபோது, இவர்கள் அதிலிருந்து விலகினார்கள். ஒருவகையில், அதை விட்டு முகந்திருப்பினார்கள். ஆனால், ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் அவ்வாறு செய்யவில்லை. அல்லாஹ் அவர்களுக்கு தோள்களுக்கு பதிலாக இரண்டு இறக்கைகளை வழங்கினான். அவர்கள் அவற்றைக் கொண்டு சொர்க்கத்தில் விரும்பும் இடத்திற்குச் செல்கிறார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களின் மகன் அப்துல்லாஹ்வுக்கு ஸலாம் கூறும்போது,

اَلسَّلَامُ عَلَيْكَ يَا ابْنَ ذِي الْجَنَاحَيْنِ

என்று கூறுவார்கள். அதாவது இரண்டு இறக்கைகளை உடையவரின் மகனே! உம் மீது சாந்தி உண்டாவதாக!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சில விஷயங்களை எடுத்துரைத்தவாறு ஒரு விஷயம் தொடர்பாக கூறுகிறார்கள்: எவை சிரமமான காரியங்களாக இருக்கின்றனவோ அவற்றை மக்கள் சிலர் புரிகிறார்கள். சிலர் புரிவதில்லை. (அதனை) தெரிந்தவர்களாகிய மற்ற மக்கள் அறியாதவர்களுக்கு அந்த காரியங்களைப் புரிய வைக்க வேண்டிய தேவை இருக்கிறது.

அவர்கள் தாம் கவனம் செலுத்துவதில்லை என்பதனால் அல்லது அவர்களது உள்ளம் ஏதாவது பாவத்தின் காரணமாக இறைவனின் அருளை ஈர்ப்பதற்கு ஆயத்தமாக இருப்பதில்லை என்பதனால் புரிவதில்லை. இந்தக் கடினமான கருத்துகள். இவை நுணுக்கமான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஓரிறைக் கொள்கை இருக்கிறது. இறைவன் ஒருவன் என்ற அளவில் அதன் பகுதியை ஒவ்வொருவராலும் புரிய முடியும். ஆனால், எவ்வாறு மனிதனின் ஒவ்வொரு செயலிலும் இறைவனின் ஏகத்துவத்தின் தாக்கம் ஏற்படுகிறது என்ற இந்த மறைவான நுணுக்கங்களைப் புரிவதற்கு இறைவனை அடையாளம் காணும் ஒருவரின் தேவை ஏற்படும்.

இந்த விவகாரங்களை மற்றவர்களுக்குப் புரிய வைப்பதற்காக அறிஞர் ஒருவர் தேவைப்படுவார். ஒவ்வொருவராலும் இந்த நுணுக்கங்களை கண்டெடுக்க முடியாது. ஆனால், திருக்குர்ஆன் மற்றோர் இறைவன் இருப்பதாகக் கூறவில்லை. இறைவன் ஏகன் ஆவான் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான் என்ற அளவில் விஷயத்தைக் கண்டிப்பாகப் புரிந்து கொள்வார்.

இரண்டாவது, இந்த சிரமங்கள் எத்தகைய பொருள்கள் தொடர்பாக உருவாகின்றன என்றால், அவை அறிவுசார்ந்தவையாக இருக்காதுதான்; ஆனால், ஒப்புமை மற்றும் உவமை மொழியில் அவை எடுத்துக் கூறப்பட்டிருக்கும். சில அறிவுசார் விவகாரங்களாக இருப்பதில்லை. சில முக்கியமான சொற்றொடர்கள் மரபுத் தொடர்புகளாக இருக்கின்றன. அவற்றை மக்களால் புரிய முடியாது. அவை எடுத்துக் கூறப்பட்டால் சிலர் அவற்றிற்குத் தலைகீழான பொருளை எடுத்துக் கொள்கிறார்கள். அன்னார் இவ்வாறு எடுத்துக் கூறுகிறார்கள்: பொது மக்கள் அந்த மொழிமரபை அறியாததனால் அதற்கு எத்தகைய பொருளை எடுத்துக் கொள்கிறார்கள் என்றால், அவை உண்மையை அடிப்படையாகக் கொண்டிருப்பதில்லை.

அன்னார் (ஸல்) எடுத்துக்காட்டு வழங்கியுள்ளார்கள். உதாரணமாக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒரு நிகழ்வு நடந்தது. சிரியாவின் போரில் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை படைத்தளபதியாக ஆக்கி அனுப்பி வைத்தார்கள். ஸைது கொல்லப்பட்டார் என்றால், ஜஃபர் பின் அபீ தாலிப் தளபதி பொறுப்பை ஏற்றுக்கொள்வார். ஜஃபர் கொல்லப்பட்டார் என்றால், அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) தளபதி பொறுப்பை ஏற்றுக் கொள்வார் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஆக, எவ்வாறு கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்களோ அவ்வாறே நிகழ்ந்தது. ஹஸ்ரத் ஸைது (ரலி), ஹஸ்ரத் ஜஃபர் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகிய மூவரும் ஷஹீது ஆகிவிட்டனர். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் படையைத் தமது தலைமையில் எடுத்துக் கொண்டு பாதுகாப்பாக அதைத் திருப்பி அழைத்து வந்தார்கள். மதீனாவில் இந்த செய்தி வந்தடைந்தபோது, எந்தப் பெண்களின் கணவர்மார்கள் கொல்லப்பட்டிருந்தனரோ அல்லது எந்தப் பெற்றோரின் பிள்ளைகள் அந்தப் போரில் ஷஹீது ஆனார்களோ அவர்கள் ஷரீஅத் அனுமதி அளித்துள்ள அளவுக்கு அழத் தொடங்கி விட்டார்கள். கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் வருத்தத்தை வெளிப்படுத்துவதற்காக மட்டுமே அன்றி, பெண்கள் ஒன்றுகூடி அழ வேண்டும் என்பதற்காக அல்லாமல், ஜஃபருக்காகவோ அழுபவர் எவரும் இல்லையே என்று கூறினார்கள்.

அவர்கள் அன்னாருடைய உறவினராக இருந்தார்கள். அன்னார் (ஸல்) வருத்தத்தை வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னைப் பெருத்தவரையில் இந்தச் சொற்றொடரின் மூலமாக, ஜஃபருக்காக எவராவது அழ வேண்டும் என்பது ஒருபோதும் அன்னாரது நோக்கமாக இருக்கவில்லை. மாறாக, அதன் பொருள் என்னவாக இருந்தது என்றால், எம் சகோதரரும்தான் இந்தப் போரில் கொல்லப்பட்டுள்ளார். நாம் அழாதபோது நீங்களும் பொறுமை காக்க வேண்டும். இதனை பெருமானார் (ஸல்) அவர்கள் புரிய வைக்க விரும்பினார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

ஏனெனில், ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களின் உறவினராக ஒன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருந்தார்கள் அல்லது ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இருந்தார்கள். இவர்கள் எந்த அளவு உயர்ந்த தரத்தை எட்டிய மக்களாக இருந்தார்கள் என்றால், அதன் அடிப்படையில் அவர்களது குமுறல் வெளிவர முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கதறி அழுதிருக்க முடியாது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் கதறி அழுதிருக்க முடியாது. அவர்களுக்குத் தெரிந்திருந்தது. சரியான புரிதல் இருந்தது. எனவே கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் அநேகமாக, என் சகோதரர் ஜஃபரும் இறந்து விட்டார். ஆனால், நான் அழவில்லை என்பதை வெளிப்படுத்துவதற்காக ஜஃபருக்காக அழுபவர் எவரும் இல்லையா? எனக் கூறினார்கள்.

அன்ஸாரிகள் இந்த விஷயத்தைக் கேட்டதும், ஹஸ்ரத் ரஸூல்லலாஹ் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு விஷயத்தையும் நிறைவேற்றுவதற்காக அவர்கள் ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பதனால் அவர்கள் தத்தமது வீட்டுக்குச் சென்று பெண்களிடம், இங்கு அழுது புலம்புவதை விட்டு விடுங்கள்; ஜஃபரின் வீட்டுக்குச் சென்று அழுதிடுங்கள் என்று கூறத் தொடங்கினார்கள். எனவே பெண்கள் அனைவரும் ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களின் வீட்டில் திரண்டதும், அனைவரும் அழுகைக் குரலை உருவாக்கியபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த ஓசையைக் கேட்டதும் என்ன ஆனது? என்று வினவினார்கள்.

அன்ஸாரிகள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் ஜஃபருக்காக அழுபவர் எவரும் இல்லை எனக் கூறினீர்கள் அல்லவா? எனவே நாங்கள் எங்கள் பெண்களை ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு அனுப்பி விட்டோம் ; அவர்கள் அழுகிறார்கள் என்று கூறினார்கள். நான் இந்தப் பொருளில் கூறவில்லையே! செல்லுங்கள்; அவர்களை தடுத்து நிறுத்துங்கள்; நான் கூறியதன் பொருளோ நாம் அழவில்லை ; நீங்களும் பொறுமை காத்திடுங்கள்! என்பதாக இருந்தது என்று ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஆக, ஒரு நபர் சென்றார். அவர் அவர்களைத் தடுத்தார்.

அந்தப் பெண்கள் அந்த நபரைப் பார்த்து, நீ யார்? எங்களைத் தடுப்பதற்கு? கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களோ இன்று வருத்தத்தை வெளிப்படுத்தியவாறு ஜஃபருக்காக அழுபவர் எவரும் இல்லை? என்று கூறினார்கள். நீ எங்களை தடுக்கின்றாயே? எனக் கூறினார்கள். அவர் இந்த பதிலைக் கேட்டு மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு வந்தார். ஏனெனில் மக்கள் சிலருக்கு மற்றவர்களின் சின்னச் சின்ன விஷயங்களை எட்ட வைப்பதற்கும் ஆர்வம் இருந்தது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அவர்கள் இதைக் கூறியதும், அவர் உடனடியாக வந்து மாநபி (ஸல்) அவர்களின் மேலான அவையில், அந்தப் பெண்கள் நான் கூறுவதைக் கேட்பதில்லை என்று கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுடைய தலையில் மண்ணைப் போடுவீராக! என்று கூறினார்கள். இது மரபுத் தொடராகும். அவர்களை விட்டுவிடுவீராக! ; அவர்களை ஒன்றும் கூறாதீர்! அவர்களே

அழுது புலம்பி விட்டு அமைதியாகி விடுவார்கள் என்பது இதன் பொருளாக இருந்தது.

இறைவன் தான் அறிவை வழங்க வேண்டும். அவர் தனது போர்வையில் மண்ணை நிரப்பினார். அவர் வெளிப்படையில் நிறைவேற்றத் துவங்கி விட்டார். மேலும் அந்தப் பெண்கள் தலை மேல் போடத் துவங்கி விட்டார். அன்னார் அவரிடம், பைத்தியம்! என்ன செய்கிறாய்? என்று கேட்டார்கள். அதற்கு, நபி (ஸல்) அவர்கள்தான் மண்ணைப் போடச் சொன்னார்கள் ; எனவே நானோ கண்டிப்பாக போடுவேன் என்று அவர் கூறினார்.

இப்பொழுது ஓர் உவமையான மொழியாக இருக்கிறது. அதை அவர் செயல் ரீதியில் நிறைவேற்றத் துவங்கி விட்டார். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு இதைப் பற்றி தெரிய வந்ததும், அவர்கள் அவரைத் திட்டினார்கள். மேலும் உனக்கு விஷயமே புரியவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களோ அவர்களைப் பற்றி பேச வேண்டாம் ; விட்டுவிடுவீராக.அவர்களே அமைதியாகி விடுவார்கள் என்ற பொருளில் கூறினார்கள். நீ மண்ணைப் போட ஆரம்பித்து விடு! என்பது பொருளாக இருக்கவில்லை எனக் கூறினார்கள்.

இப்பொழுது இது நபி (ஸல்) அவர்களின் ஓர் உவமை வடிவிலான கூற்றாக இருந்தது. ஆனால் அவர் உண்மையிலேயே மண்ணைப் போட ஆரம்பித்து விட்டார். ஆக, மக்கள் சிலவேளை உவமைகளைப் புரிய முயற்சி செய்வதில்லை. இப்பொழுது இங்கே பாருங்கள். ஓர் ஆணோ புரியவில்லை. ஏனெனில், அவருக்கு அவ்வளவு அறிவு இருக்கவில்லை. ஆனால், ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அவருக்குப் புரிய வைத்தார்கள்.

சிலவேளை (மக்கள்) எப்படி சொற்பொருளை எடுத்துக் கொள்கிறார்கள் என்றால், அவை உண்மைக்கு எதிராக இருக்கின்றன. இவ்வாறு விஷயம் எங்கேயோ போய் விடுகிறது. இந்த நிகழ்விலிருந்து, ஸஹாபா பெருமக்களுக்கு மாநபி (ஸல்) அவர்களுடன் இருந்த பேரன்பும் வெளிப்படுகிறது. அதை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த நிகழ்வை எடுத்துரைத்து, பிறிதோரிடத்தில் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்: ஸஹாபா தம் பெண்களை அழுவதற்காக ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்களின் வீட்டுக்கு அனுப்பிய போது, அந்த நிகழ்விலிருந்து ஸஹாபாவின் உள்ளங்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீதமிருந்த அன்பு வெளிப்படுகிறது.

அந்த அன்பு ஹுஸூர் (ஸல்) அவர்களுடைய சொற்களில் அன்னார் என்ன கூற விரும்புகிறார்கள்? என்பதை அவர்களை யோசிக்க விடவில்லை. மாறாக, அவர்கள் உடனடியாக பெண்களிடம், உங்களுடைய துக்கத்தை மறந்து விட்டு, கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களின் துக்கத்தில் கலந்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

இதிலிருந்து அவர்களுடைய உள்ளங்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது எத்தகைய பேரன்பு இருந்தது என்று நீங்கள் புரிய முடியும். ஜஃபரின் இல்லத்திலிருந்தோ எந்த அழுகுரலும் கேட்கவில்லையே! என்ற இந்த வாக்கியத்தைக் கேட்ட உடனேயே, நாம் நம் உறவினர்களின் ஷஹாதத்திற்காக அழுது தவறிழைத்து விட்டோமே! உண்மையான பெருந்துயரமோ கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்குத்தான் ஏற்பட்டுள்ளது என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

வெளிப்படையாக பார்க்கும் போது, இது ஒரு சிறு நிகழ்வுதான். ஆனால், உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக இதை விடச் சிறந்த நிகழ்வுகள் மிகக் குறைவாகவே கிடைக்க முடியும். இவர்கள் எத்தகைய மக்கள் என்றால், இவர்களுடைய தொண்டுகள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் கண் முன் இருந்தன. அவர்களுடைய தியாகங்கள் ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு நொடியும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கண்களுக்கு முன்னால் நிகழ்ந்து வந்தன. இந்த மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை எப்படி நேசித்தார்கள் என்றால், அதற்கான எடுத்துக்காட்டு உலகின் எந்த உறவிலும் கிடைக்க முடியாது.

எனவே உலகின் அடிப்படையில் பார்த்தால், உணர்வுகள் அடிப்படையில் பார்த்தால், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள், அவர்களுடைய உணர்வுகளை அதிகம் கருத்தில் கொண்டிருக்க வேண்டும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு நம் மீது அன்பு குறைவாக இருந்திருக்க வேண்டும். அதாவது, இக்காலத்து மக்களாகிய, பிற்காலத்தில் பிறந்தவர்களான நம்முடனோ மிகவும் குறைவான அன்பு இருந்திருக்க வேண்டும். அன்னாரோ எப்போதும் அன்பை வெளிப்படுத்தக் கூடியவராக இருந்தார்கள். அந்த மக்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கு முன்னால் இருந்தார்கள்.

ஆனால், அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: மனிதனின் அன்பு எல்லையற்றதாக இருக்க முடிந்த அளவு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் எல்லையற்ற அன்பில், ஹுஸூர் (ஸல்) அவர்கள் உங்களுடைய துணிவைத் தொய்வடைய விட விரும்பவில்லை. அதாவது, இக்காலத்தின் மக்களின் துணிவைத் தொய்வடைய விட விரும்பவில்லை. அவர்கள் உங்களுடைய துணிவைத் தொய்வடைய விட விரும்பவில்லை.

இன்னும் கூறுவதாயின், கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களின் அன்பைப் பாருங்கள்! அன்னார் (ஸல்) நடுவில் வரும் உம்மத்தின் துணிவையும் தொய்வடைய விட விரும்பவில்லை. ஆக, ஒரு சபையில் ஹுஸூர் (ஸல்) அவர்கள் பிற்காலத்தில் வருபவர்களைப் பற்றிய குறிப்பை இந்தச் சொற்களில் குறிப்பிட்டார்கள்: அதாவது எனக்குப் பிறகு வரவிருக்கும் என் சகோதரர்களாகிய அவர்கள் இப்படி இருப்பார்கள்.

ஸஹாபா பெருமக்களுக்கு இதைக் கேட்டதும் பொறாமை வந்து விட்டது. அவர்கள், அவர்கள் சகோதரர்கள் ஆவார்கள். நாங்கள் சகோதரர்கள் இல்லையா? நாங்கள் தங்களுடன் இருக்கிறோம்; எங்களைத் தாங்கள் சகோதரர்கள் என்று கூறவில்லை. ஆனால், பின்னால் வரப்போகின்றவர்களைத் தாங்கள் தங்களின் சகோதரர்கள் என்று கூறுகிறீர்களே? எனக் கேட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் ஸஹாபா ஆவீர்கள். அவர்கள் என் சகோதரர்கள் ஆவார்கள். நீங்கள் என் ஸஹாபிகள் ஆவீர்கள். அவர்கள் என் சகோதரர்கள் ஆவார்கள். உங்களுக்கு என்ன! இது குறைவான அருட்கொடையா கிடைத்திருக்கிறது? நீங்கள் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். என்னுடன் இருந்து மார்க்கத் தொண்டுகள் ஆற்றுகின்றீர்கள். உங்களுக்குக் கிடைத்திருக்கும் இது மிகப் பெரும் அருட்கொடையாகும். என்னைப் பார்க்க முடியாதவர்கள் பின்னால் வரப்போகின்றவர்கள். எனக்குப் பிறகு வரப்போகின்றவர்கள் ஆன அந்த மக்கள் தொடர்பாகவும் என்னை ஏதாவது சொல்ல விடுங்களேன்; அவர்களைப் பற்றி என்ன சொல்லைப் பயன்படுத்தட்டும் என அவர்கள் தொடர்பாகவும் என்னைக் கூறவிடுங்கள்; இவ்வாறு அவர்களுக்கும் திருப்தி ஏற்படட்டும்! அவர்களுடைய மனஉறுதியும் அதிகரிக்கட்டும்!

இவ்வாறு பின்னால் வரப்போகின்றவர்களின் மனஉறுதியை மாநபி (ஸல்) அவர்கள் அதிகரித்தார்கள். ஆக நபி (ஸல்) அவர்கள் உங்களுடைய துணிவை எந்த அளவு அதிகரித்து விட்டார்கள் என்று பாருங்கள்! பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: எனது சமுதாயத்தின் முதல் பகுதி சிறந்ததா? அல்லது இறுதி பகுதி சிறந்ததா? என்று எனக்குத் தெரியாது.

மூத்தா போர் ஷஹீதுகள் பற்றி மேற்கொண்டு இன்னும் அறிவிப்புகள் உள்ளன. அல்லாமா இப்னு கஸீர் அவர்களின் நூல் பிதாயா வந்நிஹாயாவில் மூத்தா போர் ஷஹீதுகள் பற்றி கூறிய பிறகு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அந்த ஷஹீதுகளின் எண்ணிக்கை 12 ஆகும். சில அறிவிப்புகளில் ஷஹீதுகளின் எண்ணிக்கை அதிகமாகவும் கூறப்பட்டுள்ளது.

ஆனால், எவ்வாறு இருப்பினும், இது மிகப் பெரும் அற்புதம் ஆகும். அதாவது இரண்டு படைகள் எதிரெதிரே இருக்கின்றன. ஒன்று இறை வழியில் சண்டையிடுகிறது. ஒன்றின் எண்ணிக்கை மூவாயிரமாக இருக்கிறது. அதே வேளையில், எதிரிப் படையான மற்றதின் எண்ணிக்கை 2 இலட்சமாக இருக்கிறது. ஒரு இலட்சம் பேர் ரோமானியர்கள். ஒரு இலட்சம் பேர் கிறிஸ்தவர்கள். அவர்கள் ஒருவர் மற்றவருடன் பெரும் போர் புரிகிறார்கள். பிறகும் கூட முஸ்லிம்களின் 12 பேர் மட்டுமே ஷஹீதாகியிருக்கிறார்கள். அல்லது மிகக் குறைவான எண்ணிக்கையில் மக்கள் ஷஹீதானார்கள். இணை வைப்பாளர்களின் பெரும் எண்ணிக்கை நரகத்துக்குச் சென்றது.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மட்டுமே கூறுகிறார்கள்: அன்று எனது கையில் ஒன்பது வாள்கள் உடைந்தன. ஓர் ஏமன் நாட்டு வாள் மட்டுமே எனது கையில் நின்றது. இந்த அனைத்து வாள்களாலும் எத்தனை இணை வைப்பாளர்கள் நரகத்துக்குச் சென்றிருப்பார்கள்.

முஸ்லிம்கள் மதீனாவுக்குத் திரும்பி வந்தது தொடர்பாகவும், ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவர்களை வரவேற்றது தொடர்பாகவும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

முஸ்லிம்கள் திரும்பி வரும்போது, ஓர் ஊரைக் கடந்து சென்றார்கள். அதில் ஒரு கோட்டை இருந்தது. செல்லும்போது, இந்த இடத்தில் வாழும் மக்கள் முஸ்லிம் ஒருவரைக் கொன்று விட்டிருந்தார்கள். முஸ்லிம்கள் அந்த இடத்தை முற்றுகையிட்டு விட்டார்கள். எதுவரை என்றால், அதை வெற்றி கொண்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அதன் தலைவர்களைக் கொன்று விட்டார்கள்.

முஸ்லிம்கள் மூத்தா போரிலிருந்து திரும்பிவரும்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஸஹாபா பெருமக்களும் அவர்களை வரவேற்றார்கள். அவர்கள் திரும்பி வந்ததும், இவர்கள் ஏன் ஷஹீதாகி வரவில்லை. இது ஒன்றும்

வெற்றியில்லையே? என மக்கள் சிலருக்குப் பெருங்கோபம் இருந்தது. மக்கள் சிலர் படையின் மீது மண்ணைத் தூவத் துவங்கினர். ஃபரார் ஆனவர்களே அதாவது ஓடி வந்து விட்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் வழியிலிருந்து ஓடி வந்து விட்டீர்கள்! என்று கூறத் துவங்கி விட்டார்கள். அவர்களைப் பழித்துக் கூறினார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், இவர்கள் ஃபரார் ஆனவர்கள் அல்ல ; அதாவது ஓடி வந்து விட்டவர்கள் அல்ல ; மாறாக கரார் ஆவார்கள். அதாவது, திருப்பித் தாக்கக் கூடியவர்கள் ஆவார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: முஸ்லிம்கள் மூத்தாவிலிருந்து திரும்பி வந்ததும் நானும் திரும்பி வந்து விட்டேன். பிறிதோர் அறிவிப்பில் அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் ஓடி வந்து விட்டோம் என்று நாங்கள் வெட்கமடைந்திருந்தோம். நாங்கள் அங்கு விட்டுவிட்டு வந்து விட்டோம் என நினைத்தோம். ஆனால், எதிரிகளோ அவர்களாகவே அங்கிருந்து பின்னால் விலகிவிட்டிருந்தனர்.

இவர்கள் அவர்களை விரட்டிச் செல்லவில்லை. மாறாக, இவர்கள் இதைப் பொன்னான தருணமாகக் கருதினார்கள். திரும்பி வந்து விட்டார்கள். இது நல்ல நுட்பமான செயல்திறனாக இருந்தது. ஆனால், அதையும் மக்கள் சிலர் ஓடி வந்து விட்டதாக நினைத்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் ஓடி வந்து விட்டோம் என வெட்கமடைந்திருந்தோம்.

ஒருவர் கூறுகிறார்: நாம் மதீனாவுக்கு சென்றால் கொல்லப்படுவோம் என்று நாங்கள் கூறினோம். நாங்கள் இரவில் மதீனாவில் நுழைந்து ஒளிந்து கொண்டோம்.

சிலர் எவ்வளவு வெட்கமடைந்திருந்தார்கள் என்றால், இரவில் நுழைந்தார்கள்; ஒளிந்து கொண்டார்கள். ஆனால், கூறுகிறார்கள்: நாம் நபி (ஸல்) அவர்களின் மேலான அவைக்குச் சென்று, அன்னாரிடம் காரணத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டால் ஒருவேளை அந்த தவ்பா ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டால் சிறந்தது.; இல்லையென்றால், நாம் சென்றுவிடுவோம் என்று நாங்கள், கூறினோம். அதாவது, மீண்டும் போருக்காக ஆயத்தமாகி சென்று விடுவோம் அல்லது அங்கிருந்து சென்று விடுவோம்.

நாங்கள் ஃபஜ்ர் தொழுகைக்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள் முன்னால் ஆஜரானோம். யார் நீங்கள்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். நாங்கள் ஓடிவந்தவர்கள் என்று பதில் அளித்தோம். வெட்கமடைந்திருந்தார்கள். எனவே நாங்கள் அங்கிருந்து ஓடி வந்தவர்கள் ஆவோம் என்று அவர்களாகவே கூறிவிட்டார்கள். அதற்கு, இல்லை ; நீங்கள் திருப்பித் தாக்கக் கூடியவர்கள் ஆவீர்கள்; நான் உங்கள் கூட்டம் ஆவேன் என்று மாநபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லது நான் ஒவ்வொரு முஸ்லிம் கூட்டத்தையும் சார்ந்தவன் ஆவேன் என்று கூறினார்கள். இதனால் நாங்கள் அன்னாருடைய கைகளை முத்தமிட்டோம். ஹுஸுர் (ஸல்) அவர்கள் பெரும் பரிவுடன் நடந்து கொண்டார்கள்.

பிறகு, ஒரு படையெடுப்பு பற்றி கூறப்பட்டுள்ளது. இது ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் படையெடுப்பு எனப்படுகிறது. இந்த படையெடுப்பு ஜமாதிஸ் ஸானீ ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு நிகழ்ந்தது. இந்தப் படையெடுப்பு ஹிஜ்ரீ 7-ம் ஆண்டு நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. இப்னு இஸ்ஹாக் அவர்களை தவிர ஏனைய அனைவரும் இந்தப் படையெடுப்பு மூத்தா போருக்குப் பிறகு நிகழ்ந்தது என்பதில் கருத்தொருமிக்கிறார்கள். மூத்தா போர் ஜமாதில் ஊலா ஹிஜ்ரீ 8 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இந்தப் படையெடுப்புக்குக் காரணமாக அமைந்தது என்னவென்றால், பனூ குஸாஆவின் ஒரு குழு மதீனாவின் அக்கம் பக்கம் தாக்குதல் தொடுப்பதற்காக ஒன்று கூடுகிறது என்ற செய்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது. அது பனூ குஸாஆவிலிருந்து 10 நாள்கள் பயணத் தொலைவில் வாதியுல் குறாவைத் தாண்டி முகாமிட்டிருருந்தது.

இதைப் பற்றி மேற்கொண்டு இவ்வாறு கூறப்பட்டுள்ளது. நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை வேரறுப்பதற்காக ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை அனுப்பினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் மக்காவின் ஒரு தலைவரான ஆஸ் பின் வாயில் என்பவரின் மகன் ஆவார்கள். இவர்கள் ஹிஜ்ரீ 7 ஆம் ஆண்டு அல்லது ஓர் அறிவிப்புக்கு ஏற்ப ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நான் என்னுடைய உடைகளையும், ஆயுதங்களையும் எடுத்துக் கொள்ளுமாறு எனக்கு செய்தி அனுப்பினார்கள். மேலும், அம்ரே! நான் உம்மை ஒரு படைக்கு அமீராக ஆக்கி அனுப்ப விரும்புகிறேன்; அல்லாஹ் உமக்குப் போர்ச் செல்வத்தையும் வழங்குவான்; உம்மைப் பாதுகாக்கவும் செய்வான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் நான் பொருளுக்காகவோ இஸ்லாத்தை ஏற்கவில்லை என்று பணிவுடன் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நல்ல மனிதருக்கு ஹலாலான செல்வம் இருப்பது எவ்வளவு நல்லது! நீரோ ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அல்லாஹ் வழங்கினான் என்றால், மிகவும் நல்ல விஷயம் ஆகும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களின் தலைமையின் கீழ் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகள் உள்ளடக்கிய 300 பேர் கொண்ட படையை ஆயத்தம் செய்தார்கள். அதில் 30 குதிரைகளும், குதிரை வீரர்களும் இருந்தார்கள். ஹுஸுர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களுக்காக ஒரு வெள்ளை நிறக் கொடியைக் கட்டினார்கள். அத்துடன் ஒரு கருப்பு நிறக் கொடியையும் வழங்கினார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களுக்கு, வழியில் பனூ பலீஃ, உஸ்ரா, பல்கைன் ஆகியோரில் எவராவது இவர்களைக் கடந்து சென்றால், அவர்களைத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்யுமாறு அறிவுரை வழங்கினார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் போரில் சிறப்பு திறமை கொண்டிருந்தார்கள். போர் உத்திகளையும் அறிந்திருந்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களை இவர்களின் போர்த் திறமைக் காரணமாக அமீராக்கியிருந்தார்கள்.

ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களை இந்தப் போருக்காக அனுப்பியதற்கு ஒரு காரணம் என்னவாக இருந்தது? என்றால், இவர்களுடைய தந்தை வழிப்பாட்டியார் பலீஃ கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். எனவே பனூ பலீஃ உடன் நல்ல தொடர்புகளை நிலைநாட்டுவதற்கு இவர்கள் ஒரு நல்ல பாலமாக இருக்க முடிந்திருக்கும். இஸ்லாமிய படை புறப்பட்டது. இது இரவுப் பயணமாக இருந்தது. பகல் நேரத்தில் ஒளிந்து கொள்ளும்.

எதுவரை என்றால், அது ஜுஸ்ஸாம் கோத்திரத்தின் பகுதியான ஸலாவில் எனப்படும் ஒரு நீரூற்றுக்கு அருகில் சென்று விட்டது. அந்த நீரூற்றின் பொருத்தமாக இந்தப் படையெடுப்பு ஸாத்துஸ் ஸலாஸில் படையெடுப்பு என்றும் கூறப்படுகிறது.

மதீனாவில் இருந்து மேற்கொண்டு உதவிப் படைகள் வரவழைத்தது பற்றியும் கூறப்பட்டுள்ளது. அதாவது, நீரூற்றுக்கு அருகில் சென்றடைந்ததும் எதிரிகளின் படை மிகப் பெரியது என்று முஸ்லிம்களுக்குத் தெரிய வந்தது. ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் மேற்கொண்டு உதவிக்காக ஹஸ்ரத் ராஃபி பின் மிக்யஸ் (ரலி) அவர்களை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்களுக்காகக் கொடியை ஆயத்தம் செய்தார்கள். முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளின் 200 பேர் கொண்ட படையை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகியோரும் கூட அதில் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களை அனுப்பி வைத்தவாறு, சென்றடைந்த பிறகு, ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களுடன் இணைந்து கொள்ள வேண்டும்; ஒரே படையாக ஆகிவிட வேண்டும்; ஒருவர் மற்றவருடன் வேறுபாடு கொள்ளக் கூடாது என்றும் அறிவுரை கூறினார்கள். இதன் நோக்கம் என்னவாக இருந்தது என்றால், இருவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். ஒருவர் மற்றவருடன் வேறுபாடு கொள்ளக் கூடாது. ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களே தளபதியாக இருப்பார்கள்.

இதன் விவரத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஒரு தருணத்தில் ஒருமுறை முஸ்லிம்கள் குளிரிலிருந்து தப்பித்துக் கொள்ள குளிர்காய்வதற்கு தீ மூட்டுவதற்காக விறகுகளை சேகரித்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் அவர்களை தடுத்து விட்டார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் தீ மூட்டக் கூடாது என தடுத்த போது, ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்களுக்குக் கோபம் வந்து விட்டது. அவர்கள், அவர்களிடம் செல்ல நினைத்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களைத் தடுத்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

இவரை இவரது போர்த் திறமையின் காரணமாகவே அமீர் ஆக்கியுள்ளார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் திரும்பி வந்ததும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம், எதிரி எங்களுடைய குறைவான எண்ணிக்கையைப் பார்த்து, மேற்கொண்டு உதவிப் படையை வரவழைத்து எங்கள் மீது தாக்குதல் தொடுத்து விடாமல் இருப்பதற்காகத்தான் நான் தீ மூட்ட விரும்பவில்லை என்று கூறினார்கள். இதனால் மாநபி (ஸல்) அவர்கள் அவர்களைப் பாராட்டினார்கள்.

எவ்வாறாயினும், விளக்கத்தில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: முஸ்லிம்கள் அங்கிருந்து புறப்பட்டார்கள். எதுவரை என்றால், எதிரியின் பகுதியைச் சென்றடைந்து அதைத் தரைமட்டமாக்கினார்கள். அதன் மீது மேலோங்கி விட்டார்கள். எதுவரை என்றால், எங்கு அவர்களுக்கு எதிரி ஒன்று கூடுவது பற்றிய செய்தி தெரிந்ததோ அந்த இடத்தை முஸ்லிம்கள் அடைந்ததும், எதிரிகள் முஸ்லிம்கள் பற்றிய செய்தியறிந்து ஓடி விட்டார்கள். மேலும் சிதறிப் போய் விட்டார்கள்.

முஸ்லிம்கள் அவர்களைப் பின்தொடர்ந்தபோது, எதிரிகளின் ஒரு சிறு குழுவுடன் அவர்கள் மோதினார்கள். அவர்கள் அதன் மீது தாக்குதல் தொடுத்து அதைத் தோற்கடித்து விட்டார்கள். மற்றவர்கள் எல்லாம் ஓடி விட்டார்கள். முஸ்லிம்கள் கொஞ்ச நாள் இங்கு தங்கியிருந்தார்கள். எங்கெல்லாம் எதிரியின் ஏதாவது ஒரு படையைப் பற்றி கேள்விப்படுவார்களோ அப்பொழுது அதை எதிர் கொள்ள குதிரை வீரர்களை அனுப்புவார்கள். அவர்கள் அதனுடன் போரிடுவார்கள். ஆடுகளையும், ஒட்டகங்களையும் எடுத்துக் கொண்டு திரும்பி வந்து விடுவார்கள்.

முஸ்லிம்கள் மதீனாவுக்குத் திரும்பி வர புறப்பட்டு விட்டார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அவ்ஃப் பின் மாலிக் அஷ்ஜஈ (ரலி) அவர்களை, இவர்கள் திரும்பி வருவது, நலமுடன் இருப்பது மற்றும் போரின் நிலைமைகள் பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்காக அன்னாரிடம் முன்னால் அனுப்பினார்கள்.

பிறகு, ஒரு படையெடுப்பு இருக்கிறது. ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் படையெடுப்பு. இந்தப் படையெடுப்பு ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு நடைபெற்றது. ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் தமது நூலின் இறுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளை பதிவு செய்துள்ளார்கள். அதன்படி, ஹஸ்ரத் அபூ உபைதா படையெடுப்பு ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு - கி.பி 629-ம் ஆண்டு, நவம்பர் மாதம் நடைபெற்றது. இந்தப் படையெடுப்புக்கு இதர பெயர்களும் உள்ளன. இந்தப் படையெடுப்பு ஸீஃபுல் பஹ்ர் படையெடுப்பு என்றும், ஃஹதப் படையெடுப்பு என்றும் கூறப்படுகிறது. ஸீஃபுல் பஹ்ர் என்றால், கடற்கரை என்று பொருள்.

இந்தப் படையெடுப்பில் ஸஹாபா பெருமக்கள் செங்கடலின் கரையில் சென்று தங்கினார்கள். எனவேதான் இது ஸீஃபுல் பஹ்ர் படையெடுப்பு எனப்படுகிறது. இதை ஃஹபத் படையெடுப்பு அதாவது இலை தின்ற படையெடுப்பு என்று ஏன் கூறப்படுகிறது? என்றால், இந்தப் படையெடுப்பின் போது, ஸஹாபா பெருமக்கள் மரத்தின் இலைகளை உண்ணும் நிர்பந்தத்திற்கு ஆளானார்கள். அப்படிப்பட்ட ஒரு நேரமும் வந்தது.

இந்தப் படையெடுப்பின் அமீர் ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இவர்களை முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரி ஸஹாபிகளின் 300 பேர் கொண்ட படையை வழங்கி பனூ ஜுஹைனாவின் ஒரு கிளைக் கோத்திரத்தின் பக்கம் அனுப்பி வைத்தார்கள்.

அந்தப் படையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் இருந்தார்கள். பனூ ஜுஹைனா கபலியா எனும் இடத்தில் வாழ்ந்து வந்தார்கள். கபலியா மதீனாவிலிருந்து ஐந்து இரவுகள் பயணத் தொலைவில் கடற்கரைக்கு அருகில் இருந்த ஓர் இடமாகும். இந்தப் படையெடுப்புக்கான காரணமாக கூறப்படுவதாவது, மக்கத்து குறைஷியர்களின் ஒரு படை தானியங்களை எடுத்துக் கொண்டு கடற்கரையோரமாக சிரியாவிலிருந்து மக்காவுக்குச் சென்று கொண்டிருந்தது. அதன் மீது ஜுஹைனாவின் ஒரு கோத்திரத்திடமிருந்து தாக்குதல் தொடுப்பதற்கான ஆபத்து இருந்தது. இது ஹுதைபிய்யா உடன்படிக்கை காலமாக இருந்தது.

ஜுஹைனா ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நட்புக் கோத்திரமாக இருந்தது. எனவே நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டவாறு, சிரியாவிலிருந்து வரக் கூடிய குறைஷியப் படையுடன் (அவர்கள்) மோதாமல் இருப்பதற்காகவும், குறைஷியர்களுக்கு அமைதி சீர்குலைந்து விட்டது; உடன்படிக்கை மீறப்பட்டு விட்டது என்ற சாக்குப் போக்கு கிடைத்து விடாதிருப்பதற்காகவும் முன்னெச்சரிக்கையாக ஒரு பாதுகாப்புப் படைக் குழுவை அவர்கள் பக்கம் அனுப்பி வைத்து விட்டார்கள். அங்கு குடியிருக்கும் இந்தக் கோத்திரம் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடாதிருப்பதற்காக, அவர்களது பாதுகாப்பிற்காக, அதாவது குறைஷியர்களின் பயணக் குழுவின் பாதுகாப்பிற்காக அனுப்பி வைத்தார்கள். ஏனெனில், ஹுதைபிய்யா சமரச உடன்படிக்கை ஆகி விட்டிருந்தது. அவர்களைப் பாதுகாப்பதும் அவசியமாக இருந்தது.

புதிய உறுதிமொழியைக் கடைபிடிக்க வேண்டியிருந்தது. எனவே குறைஷியர்களான அவர்களது பயணக்குழு நிம்மதியாக அங்கிருந்து கடந்து செல்லும் பொருட்டு, அவர்களைப் பாதுகாப்பதற்காக ஹுஸூர் (ஸல்) அவர்கள் இங்கிருந்து இராணுவத்தை அனுப்பினார்கள். 300 பேர் கொண்ட படைக் குழுவை அனுப்பினார்கள். இதிலிருந்து இந்த ஸஹாபா பெருமக்கள் யாருடனும் சண்டையிடுவதற்காக செல்லவில்லை என்பது தெரிய வருகிறது. 15 நாள்களுக்கு மேல் தங்கியிருந்த போதும், எந்தப் போரைப் பற்றிய குறிப்பும் கிடைப்பதில்லை.

இந்தப் படையெடுப்புக்காகப் புறப்பட்டது மற்றும் பயண உணவு தீர்ந்து போனது பற்றி ஒரு விபரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் இந்தப் போர்ப் படையெடுப்புப் பற்றி கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களை அனுப்பினார்கள். நாங்கள் பயண வீரர்கள் 300 பேர் இருந்தோம். எங்கள் அமீராக ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜர்ராஹ் (ரலி) அவர்கள் இருந்தார்கள். நாங்கள் புறப்பட்டோம். சிறிது பாதையே கடந்திருப்போம்; அதற்குள் பயண உணவு தீர்ந்து போய் விட்டது. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள், உங்களிடம் என்ன உணவு இருப்பு இருக்கிறதோ அதைக் கொண்டு வாருங்கள்; மீதமுள்ள அனைத்தும் ஒன்று திரட்டப்படட்டும்! என்று கட்டளையிட்டார்கள். ஆக அவை ஒன்று திரட்டப்பட்டன.

அவை மொத்தம் இரண்டு பேரீத்தம் பழப் பைகள் வந்தன. ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) எங்களுக்கு நாள்தோறும் கொஞ்சம் கொஞ்சம் உண்ணக் கொடுப்பார்கள். எதுவரை என்றால், அதுவும் தீர்ந்து போனது. பிறகு எங்களுக்கு ஒவ்வொரு பேரீத்தம் பழம் கிடைத்து விட்டது. அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: நான் ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களிடம், ஒரு பேரீத்தம் பழம் உங்களது பசியை எப்படிப் போக்கியிருக்கும்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், அதுவும் இல்லாமல் போனபோது, அப்பொழுது எங்களுக்கு அந்த நேரத்தில் ஒரு பேரீத்தம் பழம் இல்லாமல் போனதற்கான உணர்வு ஏற்பட்டது. ஒன்றுமே இல்லாமல் போன அந்த நேரத்தில் நாங்கள் அந்த ஒரு பேரீத்தம் பழத்தைக் கூட பொன்னானதாக உணர்ந்தோம்.

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, ஹஸ்ரத் ஜஃபர் (ரலி) அவர்கள் நாங்கள் நாள் முழுவதும் அந்த ஒரு பேரீத்தம் பழத்தையே உறிஞ்சிக் கொண்டிருப்போம்; பிறகு தண்ணீர் குடிப்போம் ; எங்களுக்கு இரவு வரை இதுவே போதுமானதாக இருந்தது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் குறைஷியர்களின் வணிகக் குழுவைப் பாதுகாப்பதற்காக கண்காணிப்பில் அமர்ந்து கொண்டோம். நாங்கள் பாதி மாதம் வரை கடற்கரையில் தங்கியிருந்தோம். எங்களுக்குக் கடுமையான பசி ஏற்பட்டது. எதுவரை என்றால், நாங்கள் இலைகளையும் உண்டோம். எனவேதான் இந்தப் படைக்கு ஜைஷுல் ஃஹபத், அதாவது இலை உண்ணக் கூடிய படை எனப் பெயர் வைக்கப்பட்டது. அவர்கள் கூறுகிறார்கள்: எங்களுடைய இந்த உணவின் காரணமாக நாங்கள் மிகவும் வலுவிழந்து போயிருந்தோம். எங்களுடைய உதடுகள் மற்றும் வாயைச் சுற்றி புண் வந்து விட்டிருந்தது. எதுவரை என்றால்,ஒருவர் இந்த நிலையில் நாம் எதிரியை எதிர்கொண்டால் நமக்கு மேற்கொள்ள வேண்டி வரும் அந்த சிரமத்தின் காரணமாக அவன் பக்கம் நகரக் கூட முடியாது. எந்தப் போரும் செய்ய முடியாது என்று கூறினார்.

உணவுக்காக ஓரிடத்தில் இங்கு ஒட்டகங்களை அறுத்தது குறித்தும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: படையில் ஒரு நபர் இருந்தார். அவர் மக்கள் உண்பதற்காக மூன்று நாள்கள் மூன்று, மூன்று ஒட்டகங்களை அறுத்தார். பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் அவரைத் தடுத்து விட்டார்கள். இந்த நபர் ஹஸ்ரத் கைஸ் பின்


Proprietor off : 044- 2260 1886

RAZIK XEROX & TELECOM

AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE

AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

ஸஃது (ரலி) அவர்கள் ஆவார்கள் என்பது வரலாற்று நூல்களிலிருந்து தெரிய வருகிறது. ஹஸ்ரத் கைஸ் பின் ஸஃது (ரலி) அவர்கள், எவர் என்னிடமிருந்து ஓர் ஒட்டகத்துக்கு பதிலாக பேரீத்தம் பழங்களை வாங்குவார்? ஒட்டகத்தையோ நான் இங்கேயே அறுத்து விடுவேன்; ஆனால், அதற்கான தொகையை மதீனாவுக்குச் சென்று கொடுப்பேன் என்று கூறினார்கள்.

அதாவது, ஸஹாபிகளின் பசியின் நிலைமையைக் கண்டு அவர்கள், நான் ஒட்டகத்தை வாங்குகிறேன். இங்கு அறுத்து நீங்கள் உண்பதற்கான ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கு இருந்தார்கள். அவர்கள், இந்த இளைஞரை நினைத்து வியப்பாக இருக்கிறது. இவரிடம் பொருள் எதுவும் இல்லை; மற்றவரின் செல்வத்தில் ஆதிக்கம் காட்டுகிறார்; வீட்டுக்குச் சென்று எங்கிருந்து கொடுப்பார்? இவருக்கு சொந்தமான தோட்டமோ எதுவும் இல்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்களை ஜுஹைனாவின் ஒரு நபர் சந்தித்தார். அவர்கள் அந்த நபரிடம், என்னிடம் ஒட்டகத்தை விற்று விடு! என்று கூறினார்கள். அங்கிருந்த கோத்திரத்திடம் கூறினார்கள். பிறகு அவர்கள் ஒட்டகத்தை நான் அதற்கான விலையை உனக்கு மதீனாவில் பேரீத்தம் பழமாகக் கொடுத்து விடுவேன் என்று கூறி வாங்கினார்கள். அந்த நபர், நீங்கள் யார்? என்று எனக்குத் தெரியாதே! என்றார். ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள், நான் கைஸ் பின் ஸஃது பின் உபாதா ஆவேன் என்று கூறினார்கள். அந்த நபர், நீங்கள் உங்களது தலைமுறையில் அதாவது குடும்ப அறிமுகத்தின் மூலமாக எனக்கு எவ்வளவு அடையாளப்படுத்தி விட்டீர்கள். எனக்கும் யஸ்ரபின் தலைவர் ஸஃது அவர்களுக்கும் இடையிலோ நட்பு உள்ளது; எங்கள் இருவருக்கும் இடையே நட்பு உள்ளது என்று கூறினார்.

ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்களிடமிருந்து 5 வஸ்கு அளவு பேரீத்தம் பழத்துக்கு பதிலாக 5 ஒட்டகங்களை வாங்கிக் கொண்டார்கள். அதாவது ஏறத்தாழ மொத்தம் ஒரு 750 கிலோ பேரீத்தம் பழங்களாக இருந்தன. அவர் எனக்கு சாட்சியைத் தாருங்கள் என்று கேட்டார். உத்திரவாதமும் இருக்க வேண்டும் என்றார். இதனால் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளான ஸஹாபா பெருமக்கள் சிலர் அவர்களுடைய சாட்சிகள் ஆகிவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இந்த செல்வமோ இவருடையது கிடையவே கிடையாது. மாறாக, இவர் தந்தையுடையது.

பேரீத்தம் பழம் பற்றி பேசுகிறார். பேரீத்தம் பழத்தோட்டங்களோ இவர் தந்தையுடையவை ஆகும். இவர் எங்கிருந்து கொடுப்பார்? என்று சாட்சி ஆகுவதற்கு மறுத்து விட்டார்கள்.

எவ்வாறாயினும், இந்தப் படை மதீனாவுக்குத் திரும்பி வந்தபோது, ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்களிடம், ஸஹாபா பெருமக்கள் பசியோடு இருந்தபோது, நீ என்ன செய்தாய்? என்று கேட்டார்கள். அவர்கள், நான் ஒட்டகத்தை அறுத்தேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள், பிறகு, என்ன செய்தாய்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் நான் மீண்டும் ஒட்டகத்தை அறுத்தேன். என்று கூறினார்கள். பிறகு என்ன செய்தாய்? என்று ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, நான் மீண்டும் ஒட்டகத்தை அறுத்தேன் என்று ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள், பிறகு என்ன செய்தாய்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் பிறகு என்னைத் தடுத்து விட்டார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள், யார் தடுத்தது? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபாதா (ரலி) அவர்கள் என்று கூறினார்கள். பிறகு, ஏன் தடுத்தார்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்கள், அவர்கள் என்னிடம் செல்வம் எதுவும் இல்லை ; மாறாக, என் தந்தையுடையது என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள், நான் உனக்கு நான்கு தோட்டங்களைத் தருகிறேன் என்று கூறினார்கள்.

இதில் அவர்களின் தந்தை மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள், நான் உனக்கு நான்கு தோட்டங்களைத் தருகிறேன். அவற்றில் எல்லாவற்றையும் விடக் குறைந்த தரத்தில் உள்ள தோட்டத்திலிருந்தும் உனக்கு 50 வஸ்கு பேரீத்தம் பழங்கள் கிடைக்கும் என்று கூறினார்கள். மிகப் பெரிய எண்ணிக்கை ஆகும். பல நூறு கிலோ ஆகிறது. ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் ஒரு மடலை எழுதிவிட்டார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களைப் போன்றோரை அதற்கு சாட்சியாக்கி விட்டார்கள். பனூ ஜுஹைனாவின் நபரும் ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்களுடன் மதீனாவுக்கு வந்திருந்தார். ஹஸ்ரத் ஸஃது (ரலி) அவர்கள் அவருக்குப் பேரீத்தம் பழங்களைக் கொடுத்தார்கள்.அவருக்கு பயண விலங்கு கொடுத்தார்கள். உடை அணிவித்தார்கள். ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வரை இந்த விஷயம் எட்டியபோது, பெருமானார் (ஸல்) அவர்கள், வள்ளல் தன்மையோ இந்த வீட்டின் இயல்பில் வைக்கப்பட்டள்ளது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸய்யித் ஸைனுல் ஆபிதீன் வலியுல்லாஹ் ஷாஹ் ஸாஹிப் அவர்கள் இந்த நிகழ்வைப் பற்றிய விளக்கவுரையில், ஸஹாபா பெருமக்கள் கடும் பசியில் மிகவும் உயர்தரமான பொறுமையைக் கடைபிடித்து, வேறு ஏதாவது பயணக் குழு அல்லது ஊரிலிருந்து உணவுக்காக சண்டையிடாமல் இருந்தது ஆகியவை மேற்கூறப்பட்ட படையெடுப்பு எந்தப் போருடனும் தொடர்புடையதாக இருக்கவில்லை. அவர்களுடைய தூய்மையான ஆன்மாக்கள் பறித்துப் பெறுவதை ஆகுமானதாகக் கருதவில்லை ; அதாவது பரிசுத்தமான ஆன்மாக்கள் எந்த ஓர் அநீதி மற்றும் கட்டாயத்தையும் ஆகுமானதாகக் கருதவில்லை என்பதற்குச் சான்றாகும் என்று எழுதியுள்ளார்கள்.

எவ்வாறாயினும், இந்த இடைப்பட்ட தருணத்தில் அவர்களுடைய பசியைப் போக்க அல்லாஹ்வும் இங்கு ஓர் ஏற்பாட்டைச் செய்தான். அதைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அந்தப் போரை பற்றிய மேற்கொண்ட நிலையை எடுத்துரைக்கின்றார்கள்: அவர்களே இவ்வாறு கூறியிருக்கின்றார்கள்:

கடல் எங்களுக்காக அம்பர் எனப்படும் ஒரு பெரிய குன்றைப் போன்ற மீனை (கடலுக்கு) வெளியே எறிந்து விட்டது. இந்த அம்பர் என்பது பெரிய மீனாகும். இதைத் திமிங்கலம் என்று கூறலாம். அல்லாமா அஸ்ஹர் அவர்கள் கூறுகிறார்கள்:

அம்பர் என்பது கடலின் ஒரு மிகப் பெரிய மீனாகும். அதன் நீளம் 50 அடி வரை எட்டிவிடுகிறது.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் அதன் இறைச்சியை பாதி மாதம் வரை இன்னோர் அறிவிப்பின்படி 18 நாட்கள் அல்லது ஒரு மாதம் வரை சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அங்கு இருக்கும்போதும், திரும்பி வரும் வரையும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அதன் கொழுப்பை உடம்பில் தேய்த்துக் கொள்வோம். எதுவரை என்றால், எங்களுடைய உடல் அதே போன்று புத்துணர்ச்சி பெற்று விட்டது. பசியினால் ஏற்பட்டிருந்த வலுவின்மை அகன்று விட்டது. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அந்த மீனின் கண்கள் பெரும் பெரும் பானைகளைப் போன்று இருந்தன. நாங்கள் அதிலிருந்து பல பானைகள் எண்ணெய் எடுத்தோம். அதன் உடலைப் பெரும் பெரும் துண்டுகளாக வெட்டி விட்டோம். அதன் சிறிது இறைச்சியை சந்தைக்குச் சென்றும் விற்றோம்.

அந்த மீனின் கண்கள் மீது அமர்ந்தது பற்றி இருவகையான அறிவிப்புகள் உள்ளன. ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நாங்கள் மொத்தம் ஆறு பேர் மீனின் கண் மீது உட்கார்ந்து கொண்டோம். ஆனால், ஓர் அறிவிப்பில் 30 பேர் உட்கார்ந்ததாகவும் கூறப்பட்டுள்ளது: ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் அதன் முதுகுத் தண்டிலிருந்து ஒரு தண்டை மற்றோர் அறிவிப்புக்கு ஏற்ப இரண்டு தண்டுகளை எடுத்தார்கள். அவற்றை நிறுத்தினார்கள். எல்லாரையும் விட உயரமான மனிதரான ஹஸ்ரத் கைஸ் (ரலி) அவர்களை எல்லாவற்றையும் விட உயரமான ஒட்டகத்தின் மீது அமர வைத்தோம். அந்த இருவரும் அதற்கு இடையில் இருந்து கடந்து சென்று விட்டார்கள். அந்தத் தண்டுகளைத் தொடக் கூட இல்லை.

மதீனாவுக்குத் திரும்பி வந்தது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் மதீனாவுக்கு வந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நாங்கள் அந்த மீனைப் பற்றி கூறினோம். ஹுஸூர் (ஸல்) அவர்கள், அல்லாஹ் வெளிக் கொண்டு வந்த ரிஸ்கை நீங்கள் உண்ணுங்கள்; உங்களிடம் ஏதும் இருந்தால் அதிலிருந்து எங்களுக்கு உண்ணக் கொடுங்கள் என்று கூறினார்கள். அவர்களில் ஒருவர் அன்னாருக்கு ஒரு பங்கைக் கொடுத்தார். அன்னார் அதை உண்டார்கள்.

இங்கு இது நிறைவடைந்தது. இது விரைவில் நிறைவடைந்து விட வேண்டும் என்றே நான் முயற்சி செய்தேன். அப்போதுதான் மற்ற கருத்துகளையும் துவங்க முடியும். ஆனால், சில ஜனாஸாக்கள், ஷஹீதுகள் பற்றிய குறிப்பு வந்து கொண்டே இருந்தது. எனவே இதில் இன்னும் சிறிது பகுதி எஞ்சியிருக்கிறது. இறுதியில் மக்கா வெற்றி பற்றிய குறிப்பும் வரும். எவ்வாறாயினும், இப்பொழுது இந்தக் குறிப்பு தொடர்கிறது. ஆனால், இன்று நான் இதையும் கூற விரும்புகிறேன். கடந்த ஜுமுஆவிலும் நான் கூறியிருந்தேன்.

இந்தியாவுக்கும் , பாகிஸ்தானிற்கும் இடையே உள்ள போர்ச் சூழல் குறித்து அதிகம் துஆ செய்யுங்கள். ஒருவர்

மற்றவருடன் சமரசம் ஏற்பட்டு அமைதியின் சூழல் உருவாகட்டும். ஏனெனில், இன்றைய நாள்களில் போர்களில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களால் பொதுமக்களும் கொல்லப்படுவார்கள் ; கொல்லப்படுகிறார்கள். இப்பொழுது போருக்கான புதிய சூழல் உருவாகிறது. எனவே இரு தரப்பினரும் சமரசத்திற்கு இணங்க வேண்டும்; பெரும் இழப்புகளில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என துஆ செய்ய வேண்டும்.

இது தொடர்பாக இந்த விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும்.இன்றைய நாள்களில் சமூக ஊடகங்கள் இருக்கின்றன அல்லது இணையத்தின் வேறு வழிமுறைகள் இருக்கின்றன ; எலக்ட்ரானிக் மீடியாக்கள் இருக்கின்றன. இவற்றில் மெஸேஜ்கள் பதிவிடப்படுகின்றன. அதில் ஒவ்வொருவரும் மிகவும் சுதந்திரமான முறையில் கருத்து தெரிவித்து விடுகிறார். தனது விருப்பத்திற்கு என்ன வேண்டுமானாலும் கூறிவிடுகிறார். அதனால் லாபம் குறைவு ; நஷ்டம் அதிகமாகும். நாங்கள் என்ன விரும்புகிறோம் என்று தம் தரப்பிலிருந்து அதிகம் வெளிப்படுத்துவதுண்டு. அஹ்மதிகள் இதிலிருந்து விலகியிருக்க வேண்டும். ஏனெனில், இந்த வெளிப்படுத்துதலுக்குப் பலன் குறைவு, இழப்பு அதிகமாகும்.

யாருக்காவது செய்தி தெரிவிப்பதற்கு அதிகம் ஆர்வம் இருந்தால் அமைதி மற்றும் சமாதானத்திற்கான தூதுச் செய்தியை வழங்கிடுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தமது வாழ்வின் இறுதியில் இயற்றிய பைஃகாமே ஸுல்ஹ் - சமாதானத் தூது எனும் நூலில் இந்தத் தூதுச் செய்தியைத்தான் வழங்கினார்கள். அதாவது அமைதி மற்றும் சமரசத்திற்கான தூதுச் செய்தியாக அது இருந்தது. எனவே அஹ்மதி ஒவ்வொருவரும் அதை நினைவில் கொள்ள வேண்டும். அதற்காகவே முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் குற்றமற்றவர்களின் உயிரிழப்புகள் ஏற்படுவதிலிருந்து அனைவரையும் காப்பாற்றுவானாக! சில பெரும் வல்லரசுகளும் அதை ஊதி வளர்க்க முயற்சி செய்வதாகத் தெரிகிறது. தமது ஆயுதங்களும் விற்பனையாகட்டும்! என்று விரும்புகின்றன. அல்லாஹ் அவர்களது தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக!

இவ்வாறே பாலஸ்தீன மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் எளிமைகளை ஏற்படுத்துவானாக! இவர்கள் நிம்மதியாகத் தமது நாட்டில் வாழ முடியட்டுமாக! ஆனால், வெளிப்படையில் பார்க்கும் போது, அமைதிக்கான எந்த சாத்தியக் கூறும் இல்லாதது போன்று தெரிகிறது. மாறாக, எப்படியாவது அவர்களை இங்கிருந்து வெளியேற்றிட வேண்டும் என்றே முயற்சி செய்யப்படுகிறது. அதில் எல்லா சக்திகளும் இணைகின்றன. முஸ்லிம் நாடுகளுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக!. அவர்கள் ஒன்றாகி விடுவார்களாக! அவர்கள் ஒன்றாகி விட்டால் பல பிரச்சனைகள் தீர முடியும். உலகப் போர் நடந்தால், நாம் தப்பித்துக் கொள்வோம் என்று சிலர் சில நாடுகள் நினைப்பது தவறான சிந்தனையாகும். இது அனைவரையும் தனது பிடியில் எடுத்துக் கொள்ளும்.

எனவே இந்த தவறான புரிதலிருந்து ஒவ்வொருவரும் தப்பித்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ் அனைவரையும் பாதுகாப்பாக வைப்பானாக! எவ்வாறாயினும், நான் எப்பொழுதும் கூறிவருவது போன்று இதற்கான ஒரே தீர்வு இறைவன் பக்கம் குனிவதே ஆகும். அந்த ஒரு வழியே அவர்களைக் காப்பாற்ற முடியும். அதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

தமிழாக்கம்
மவ்லவி அதாவுல் முஃக்னீ

* * * * * *

### மல்ஃபூஸாத் 1-ம் பக்கத் தொடர்ச்சி.....

இந்த ஓசை வேறு எவருடைய வாயிலிருந்தும் வெளிப்படவில்லை.

**முஸ்லிம் என்பதன் உண்மைத்துவம்**

தற்போது உலகின் நிலையைப் பாருங்கள்! நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ தமது செயல் மூலமாக இதனை காட்டிவிட்டார்கள். அதாவது தனது மரணமும், தனது வாழ்வும், அனைத்தும் அல்லாஹ்விற்கு உரியதாகும் என்பதை காட்டிவிட்டார்கள். நீர் முஸ்லிமா? என்று ஒருவரிடம் கேட்கப்பட்டால் அல்ஹம்துலில்லாஹ் (ஆம்) என்று அவர் கூறுகின்றார். அவர் எவருடைய கலிமாவை ஓதுகின்றாரோ அவருடைய வாழ்வின் வழிமுறையோ அல்லாஹ்விற்கானதாக இருந்தது. ஆனால், (பெயர் தாங்கி முஸ்லிம்களாகிய) இவர்களோ உலகத்திற்காகவே உயிர் வாழ்கின்றனர்; மேலும் உலகத்திற்காகவே மரணிக்கின்றனர். எந்த அளவுக்கு என்றால், அவர்களின் மரணம் தொண்டையை நெறித்து விடுகின்றது. உலகமே அவர்களின் நோக்கமாகவும், நேசத்திற்குரியதாகவும், எண்ணமாகவும் இருக்கின்றது. அவ்வாறிருக்க அத்தகைய நபர் நான் இறைத் தூதர் (ஸல்) அவர்களை பின்பற்றுகின்றேன் என்று எவ்வாறு கூற முடியும்?

இது மிகவும் சிந்திக்க வேண்டிய விஷயமாகும். இதனை சாதாரண விஷயமாக கருதாதீர்கள். முஸ்லிமாக ஆகுவது என்பது எளிதல்ல; இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுதல் மற்றும் இஸ்லாத்தின் முன்மாதிரியை தம்மிடத்தில் உருவாக்கும் வரை நிம்மதியடைந்து விடாதீர்கள்.

(இறைத் தூதர் (ஸல்) அவர்களை) பின்பற்றாமலேயே முஸ்லிம் என்று அழைக்கப்படுகின்றீர் என்றால் பின்னர் இது (பழத்தின்) வெறும் மேல்தோல் மட்டுமே ஆகும். வெறும் பெயர் மற்றும் மேல் தோலின் மீது மகிழ்ச்சியடைவது அறிவுடையவரின் பணி அல்ல. இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: ஓர் யூதனிடம் நீர் முஸ்லிம் ஆகிவிடு! என்று ஒரு முஸ்லிம் கூறினார். அப்போது, நீ வெறும் பெயரின் மீது மட்டுமே மகிழ்ச்சியடைந்து விடாதே! நான் எனது மகனுக்கு காலித் (நிரந்தரமானவர்) என்று பெயர் சூட்டினேன். மேலும் அவனை மாலைப் பொழுதுக்கு முன்னரே நல்லடக்கம் செய்து விட்டேன் என்று அவர் கூறினார்.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

எனவே உண்மைத்துவத்தை தேடுங்கள்; வெறும் பெயரின் மீது திருப்தியடைந்து விடாதீர்கள். ஒரு மனிதன் மகத்துவ மிக்க நபியின் சமுதாயத்தை சார்ந்தவர் என்று அழைக்கப்பட்டுக் கொண்டு நிராகரிப்பாளரைப் போன்று வாழ்வை கழிப்பது எவ்வளவு வெட்கத்திற்குரிய விஷயமாகும். நீங்கள் உங்கள் வாழ்வில் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை காட்டுங்கள். அதே நிலையை உருவாக்குங்கள். மேலும், பாருங்கள்! அந்த நிலை இல்லையென்றால் பின்னர் நீங்கள் ஷைத்தானை பின்பற்றக் கூடியவர் ஆவீர்கள்.

சுருக்கமாக, அல்லாஹ்வின் நேசராக ஆகுவது மனித வாழ்வின் நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில், அல்லாஹ்வின் நேசராக ஆகாத வரையிலும், இறை நேசம் கிடைக்காத வரையிலும் வெற்றிகரமான வாழ்வை கழிக்க முடியாது. இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு உண்மையான கீழ்ப்படிதலையும், பின்பற்றுதலையும் மேற்கொள்ளாத வரை இந்த விஷயம் உருவாக முடியாது. இஸ்லாம் என்றால் என்ன? என்பதை இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தமது செயலால் காட்டிவிட்டார்கள். எனவே நீங்கள் இறை நேசராக ஆகும் பொருட்டு அந்த இஸ்லாத்தை உங்களுள் மேற்கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 69- 70, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * *

### தஃப்ஸீரே கபீர் 1-ம் பக்கத் தொடர்ச்சி....

கேட்டபோது கூறினார்கள்:

உங்களுக்கு இந்த செல்வம் உங்களது திறமையால், உழைப்பால் கிடைத்தது என்று நீங்கள் கருதுகின்றீர்களா? உங்களது வலிமை மற்றும் செல்வத்திற்கான அசல் வழிமுறை ஏழைகளே ஆவார்கள். எனவே பெருமை கொள்ளாதீர்! மேலும் ஏழைகளை இழிவுபடுத்தாதீர்!

சுருக்கமாக,

وَالَّذِيْنَ هُمْ لِلزَّكٰوةِ فٰعِلُوْنَ

என்ற வசனத்தில் அல்லாஹ் இந்த விஷயத்தை கூறியுள்ளான்: அதாவது ஏழைகளின் முன்னேற்றத்திற்காக தமது செல்வங்களை செலவிட்டுக் கொண்டிருக்கின்ற மக்களும், அவர்களின் உரிமைகளை புறக்கணிக்காத மக்களுமே வெற்றி பெறுகின்றனர். ஐரோப்பாவிலோ தொழிலாளிகள் சங்கங்களை உருவாக்கியுள்ளனர். அவை தமது உரிமைகளுக்காக போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நமது இடத்திலோ முதலாவதாக, தொழிலாளிகளுக்கு அவர்களின் உரிமையைக் காட்டிலும் குறைவாகவே கொடுக்கின்றனர். மேலும், கொடுக்கின்ற ஊதியத்தையும் உரிய நேரத்தில் கொடுப்பதில்லை. ஆனால், நமது தொழிலாளர்களின் சங்கங்களோ வானத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. அவை அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்கின்றன. ஆனால், இக்காலத்தில் அல்லாஹ்வின் மீது ஈமான் இல்லை. அதன் காரணமாக மக்கள் வானத்தின் சங்கங்களின் தீர்ப்புகளின்படி அமல் செய்வதில்லை.அல்லாஹ் நாடினால் அஹ்மதிய்யத்தின் மூலமாக அதன் படி அமல் செய்ய வைத்துவிடுவான். ஆனால், தற்போதைய காலத்தில் இதன் விளைவாக

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்...

**பொருள் தியாகத்தில் ஜமாஅத் உறுப்பினர்களின் நிகரற்ற உதாரணம் மற்றும் இறைவனின் அருள்கள்**

**ஹுஸூர் அவர்களின் உரைகளின் ஒளியில்**

**(காதியான் ஜல்ஸா சொற்பொழிவு -2024)**

**மவ்லானா ரஃபீக் அஹ்மது ஸாஹிப் பேக் (நாஸிர் பைத்துல் மால் காதியான்)**

**சென்ற இதழின் தொடர்ச்சி..**

தியாகங்களில் சில முன்னுதாரணங்களை இப்பொழுது நான் கூறுகின்றேன். ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஆஃப்ரிக்காவின் மாலி நாட்டினுடைய ஒரு பற்று உள்ளவருடைய சம்பவம் இதுவாகும். அங்குள்ள முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்:

அவர்களுடைய போஸ்டிங் மாலி ரீஜினுடைய சேகோ வில் ஆகும். ஒருநாள் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு முஅல்லிம் ஸாஹிப் ஒரு நபரை என்னிடம் சந்திக்க வைத்தார். அவர் மௌலவிகளுடைய ஒரு பெரிய குடும்பத்தை சார்ந்தவர் ஆவார். அவர் பைஅத் செய்தார்கள். அவர் கூறினார்: நான் சந்தா கொடுப்பதற்காக வந்திருக்கின்றேன். ஏனெனில் நான் இன்று ரேடியோவில் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சந்தா தொடர்பான குத்பா கேட்டேன். கூறுகின்றார்கள்: நான் அவருக்கு இறைவழியில் செலவு செய்வதன் அருள்கள் தொடர்பாக

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰى تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ

. என்ற வசனத்தை எடுத்துரைத்தேன். அப்போது, அவர் மிகவும் வியப்புடன் கூறினார்: நான் ரேடியோவில் குத்பாவில் கேட்டேன். இதே வசனம்தான் ஓதப்பட்டது. எனவே நான் ஐந்தாயிரம் ஷேஃபா சந்தா செலுத்துவேன். ஆனால் அதற்குப் பிறகு ஷைத்தான் உள்ளத்தில் தடுமாற்றத்தை ஏற்படுத்தினான். வெறும் 2000 ஷேஃபாவே போதுமானதாகும் என்றான். ஆனால் எப்போது தாங்கள் இதே வசனத்தை மறுபடியும் ஓதினீர்களோ என்னுடைய உள்ளத்தில் உறுதி ஏற்பட்டு விட்டது. இது அல்லாஹ்வுடைய அமைப்பாகும். மேலும் இப்பொழுது ஐந்தாயிரம் ஷேஃபாவையே சந்தாவாக கொடுப்பேன் என்று கூறினார்.

எனவே அவர் ஐந்தாயிரம் ஷேஃபா தொகையை சந்தாவாக கொடுத்தார். அல்லாஹ்வுடைய அருளினால் புதிய அஹ்மதி பொருள் தியாகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நவம்பர் 6, 2011 அன்று ஐவேரிகோஸ்ட்டைச் சேர்ந்த ஒரு புதிய அஹ்மதியின் ஈமானை வலுவூட்டக்கூடிய ஒரு சம்பவத்தை பற்றி கூறினார்கள்.

ஐவேரிகோஸ்ட் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்: நம்முடைய நண்பர் Alido Oudraga என்ற நண்பர் 2009-ம் ஆண்டின் இறுதியில் பைஅத் செய்தார். பைஅத் செய்த முதல் நாளிலேயே தம்முடைய வருமானத்தை கணக்கிட்டவாறு சரியான வருமானத்திற்கு ஏற்றவாறு தொடர்ச்சியாக சந்தா செலுத்தி வந்தார். இந்தக் காலகட்டத்தில் அவர் சந்தாவின் எண்ணிலடங்கா அருட்களை கண்டார். ஒருநாள் ஜமாஅத்தின் பழைய உறுப்பினர்களுடன் இந்த அருள்கள் தொடர்பாக பேசிக் கொண்டிருந்தார். அந்த பழைய உறுப்பினர்களில் ஒருவர் 2004-ம் ஆண்டு பைஅத் செய்தவராவார். அந்த விஷயங்களை கேட்ட உடன் அவர் தன்னுடைய 2000 பிராஃங் சந்தாவை அதிகப்படுத்தி 5000 ஃபிராங் ஷேஃபா ஆக்குவதாக வாக்குறுதி கொடுத்தார்.

கூறுகின்றார்கள்: இப்பொழுது சந்தா செலுத்த கூட ஆரம்பிக்கவில்லை. அவர் தன்னுடைய வருமானத்தில் அசாதாரண முன்னேற்றத்தைக் கண்டார். எனவே அந்த பழைய உறுப்பினர் என்னிடம் வந்தார். முழு சம்பவத்தையும் கூறினார். மேலும் கூறுகின்றார்கள்: நான் ஐந்தாயிரம் ஷேஃபா தொகையை சந்தாவிற்கான வாக்குறுதி வழங்கினேன். ஆனால், இன்றிலிருந்து நான் ஐந்தாயிரத்திற்கு பதிலாக பத்தாயிரம் ஃபிராங்க் ஷேஃபா மாதாந்திரம் கொடுப்பேன். மேலும் அதற்கு ஏற்றவாறு சந்தா கொடுக்கவும் அவர் ஆரம்பித்து விட்டார். இவ்வாறு பல உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சந்தாவில் முன்னேறி கொண்டிருக்கின்றார்கள்.

நவம்பர் 9, 2012 அன்று ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

கிர்கிஸ்தானில் உள்ள நம்முடைய முபல்லிஃக் எழுதுகின்றார்கள். ஒரு கரக்கி நண்பர் மார்ட் ஸாஹிப் 2006 இல் பைஅத் செய்தார்கள். மிகவும் நல்ல இயல்பு கொண்ட இளைஞர் ஆவார்கள். பைஅத் செய்த உடனேயே நம்முடைய முபல்லிஃக் அவர்கள், "சந்தா தொடர்பாக மற்ற மக்கள் தங்களுடைய ஜமாஅத்தில் இணைப்பதற்காக பணம் கொடுக்கின்றார்கள்; ஆனால், இங்கே, நம்முடைய ஜமாஅத்தில் இணைவதற்கு அவரிடம் இருந்து பணம் வாங்குகின்றோம்" என்று நகைச்சுவையாக கூறினார்கள். இதற்கு அந்த நபர் கூறினார்: நான் மாதாந்திரம் 300 கர்க்கிஸ் கட்டாயச் சந்தாவில் செலுத்துவேன் என்று கூறினார். சிறிது காலத்திற்குப் பிறகு 400 ஆக மாற்றிவிட்டார். பிறகு சிறிது காலம் கடந்த உடன் 800 ஆக மாற்றி விட்டார். பிறகு சிறிது காலம் கடந்த உடன் யாரிடமும் கூறாமலேயே ஓர் ஆயிரம் ஸூம் தொகையை மாதாந்திர சந்தாவாக செலுத்த ஆரம்பித்து விட்டார்.

ஃபிரான்ஸ் அமீர் ஸாஹிப் அவர்கள் மொராக்கோ சுற்றுப் பயணத்தில் சென்றிருந்தார்கள். அங்கு புதிதாக பைஅத் செய்த அஹ்மதிகளை தியாகம் மற்றும் பற்று நிறைந்தவர்களாக கண்டார்கள். கிலாஃபத்துடன் அவர்களுக்கு அளவில்லா நேசம் இருந்தது. அவர்களுக்கு பொருள் தியாகம் தொடர்பாக கூறப்பட்டபோது மேலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோள்கள் படித்துக் காண்பிக்கப்பட்ட பொழுது பிறகு கூறுகின்றார்கள்: சில நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பர் சத்ர் ஸாஹிபை அணுகினார். மேலும் ஒரு பெரும் தொகையை அவர்களிடம் கொடுத்தார். மேலும் கூறினார். நான் எப்பொழுது அஹ்மதியாக ஆகினேனோ அந்த நாளிலிருந்து இப்பொழுது வரை உள்ள சந்தா ஆகும்.

நைஜரில் இருந்த அஸ்கர் அலி பட்டி ஸாஹிப் எழுதுகிறார்கள்: கடந்த வருடம் அக்டோபர் 2011-ல் தப்லீஃக் செய்யும் பொழுது நான் கிடா பிராவ் கிராமத்திற்கு சென்றேன். மஹ்ரிப் தொழுகைக்குப் பிறகு தப்லீஃக் செய்யப்பட்டது. மேலும் இஷா தொழுகைக்குப் பிறகு என்னுடைய சுற்றுப் பயணத்தின் பல்வேறு வீடியோக்கள் காட்டப்பட்டன. ஜல்ஸா காட்டப்பட்டது. பள்ளிவாசல்கள் தொடர்பான நிகழ்ச்சிகள் காட்டப்பட்டன. இவ்வாறு இமாம் மஹ்தி வருகை தொடர்பாக கூறப்பட்டது. பைத்துல்மால் அமைப்பு தொடர்பாக கூறப்பட்டது. இவை அனைத்தும் அந்த வீடியோக்களில் இருந்தன. வீடியோ (ஆவணப்படம்) முடிவடைந்த உடன் ஒரு இமாம் ஸாஹிப் அங்கு எழுந்தார்கள். அந்த மக்களைப் பார்த்து பேசினார்கள். பிறகு பள்ளிவாசலில் இருந்து வெளியே சென்று விட்டார்கள். கூறுகின்றார்கள்: நாங்கள் மிகவும் குழப்பத்திற்கு ஆளாகி விட்டோம். ஆனால், சிறிது நேரத்திற்குப் பிறகு திரும்பி வந்தார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள்: எங்களுக்கு இப்பொழுது தான் தெரிய வந்துள்ளது. இமாம் மஹ்தி வந்துவிட்டார்; மேலும் பைத்துல் மால் உருவாக்கப்பட்டு விட்டது. நான் அந்த அனைவரையும்




A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM
Dealers of Natural Precious & Semi-Precious Gemstones

TOONICE — DEALERS OF PRECIOUS & SEMI PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street, Melapalayam, Tirunelveli-627005, Tamil Nadu, India
+91 9659389953
toonicegems@gmail.com

Al-Nida GEMS
No. 1/83, 1st Floor Village Road, Balaji Nagar Extension, Puzhuthivakkam, Chennai-600091, Tamil Nadu, India
+91 9042150339
alnidagems@gmail.com

HG GEMS — HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot, Siphraya, Bangrak, Bangkok - 10500, Thailand
+66 638751327
gemscertify22@gmail.com



GRIZZLY
BE ALWAYS AHEAD

Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

அழைத்துக் கொண்டு சென்றேன். ஏனெனில், இந்த அமைப்பில் நாமும் இணைய வேண்டும். மேலும் சந்தாவில் ஒருவர் மற்றவரை முந்தியவாறு பங்கு பெற வேண்டும். ஆகையால் அவர்கள் அங்கு உடனடியாக தொகையை ஒன்று திரட்டினார்கள். அதை நம்முடைய மிஷனரியிடம் கொடுத்தார்கள். பிறகு பைஅத் படிவத்தை நிரப்பித் தந்தார்கள்.

தன்ஸானிய்யாவின்,தாருஸ்ஸலாம் பகுதியைச் சேர்ந்த ஈஸா ஸாஹிப் என்ற ஓர் அஹ்மதி நண்பர் கூறுகின்றார்கள்: அவர்கள் 90 களில் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதற்கு முன்பு கிறிஸ்தவ மதத்துடன் தொடர்புடையவராக இருந்தார். ஆனால், அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டதன் பிறகு ஈமானில் மிகவும் முன்னேற்றம் அடைந்தார். தற்போது மாஷாஅல்லாஹ் வஸிய்யத் செய்துள்ளார். மேலும் பொருளாதார தியாகம் செய்கின்றார். எப்பொழுதும் தன்னுடைய மற்றும் தன்னுடைய குடும்பத்தினருடைய சந்தா வாக்குறுதியை விட அதிகமாக செலுத்துகின்றார். ஜமாஅத்தின் போதனைகளின் மீது செயல்படுவதில் பழைய அஹ்மதிகளை விட மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளார். அல்லாஹ்வின் அருளினால் தன்ஸானிய்யாவின் தாருஸ் ஸலாம் மண்டலத்தின் தலைவர் கூறுகின்றார்கள்: எப்பொழுது நான் அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்ய ஆரம்பித்தேனோ அல்லாஹ் பெரும் அருள்களை என் மீது இறக்குவதை பார்க்கின்றேன். எந்த அளவிற்கு அருள்கள் இறங்குகின்றன என்றால், அவை எண்ணிலடங்காதவை ஆகும். உதாரணமாக, கூறுகின்றார்கள்: எனக்கு முன்பு ஒரு வீடு இருந்தது. ஆனால், தற்போது அல்லாஹ்வின் அருளினால் மூன்று வீடுகளுக்கு நான் சொந்தக்காரனாக இருக்கின்றேன். என்னுடைய சந்ததிகள் மிக சிறந்த இடத்தில் கல்வி கற்கின்றார்கள்.

நைஜீரியாவின் ஒரு ஜமாஅத் ஓகீனே சத்ர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: நான் சில காலமாக பொருளாதார கஷ்டத்தில் மூழ்கி விட்டேன். இதன் காரணத்தினால் மிகவும் கவலை அடைந்தேன். ஒருநாள் எனக்கு எண்ணம் வந்தது. நான் மூன்று மாதமாக சந்தா கொடுக்கவில்லை. ஒருவேளை இதன் காரணத்தினால் எனக்கு பொருளாதார கஷ்டம் வந்திருக்குமோ என்று தோன்றியது. ஆகையால் நான் மூன்று மாதத்திற்கு பிறகு நான்காயிரம் நைஜர் தொகையை சந்தாவாக செலுத்தினேன். இறைவன் எவ்வாறு நடந்து கொண்டான் என்றால், அதே மாதத்தில் நான் ஒரு நிலத்தை விற்பனை செய்தேன். எனது நேசத்திற்குரிய இறைவன் அதில் 8 லட்சம் நைஜர் தொகையை லாபமாக வழங்கினான். அந்த தருணத்தில் என்னுடைய ஈமானில் மேலும் உறதி ஏற்பட்டது. இறைவன் தன்னுடைய வாக்குறுதியில் உண்மையாளன் என்பது புரிய வந்தது. நீங்கள் அவனுடைய வழியில் செலவு செய்தீர்கள் என்றால், நிச்சயமாக பல மடங்கு அதிகமாக அவன் திரும்ப வழங்குகிறான். இப்பொழுது அவர்கள் கோகீ மாநிலத்தின் தலைநகரம் லோகோஜா வில் ஜமாஅத்திற்காக பள்ளிவாசல் மற்றும் மிஷன்ஹவுஸிற்காக ஒரு பெரிய பிளாட்டை நகரத்தில் வாங்கி கொடுத்திருக்கின்றார்.

கினிகனாகரி யின் முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: முஹம்மது ஸாகூ ஸாஹிப் என்ற ஓர் அஹ்மதி இளைஞர் கூறுகின்றார்: என்னுடைய திருமணத்திற்கான தேதி குறிக்கப்பட்டு விட்டது. மேலும் வீட்டில் திருமணத்திற்கான ஏற்பாடு செய்வதற்கு போதுமான பணம் இல்லை. எங்கிருந்து பணம் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பு இருந்ததோ அங்கிருந்து தொடர்ச்சியாக ஏமாற்றமே மிஞ்சியது. இந்த தருணத்தில் சந்தா செலுத்துவதற்காக கவனமூட்டப்பட்டது. வீட்டில் என்ன தொகை இருந்ததோ அவற்றை சந்தாவாக செலுத்தி விட்டேன். இதனால் அவர்களிடம் நிச்சயம் செய்தவர்கள் மிகவும் சச்சரவு செய்தார்கள்; மேலும் நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்? என்று கூறினார்கள். ஒரு சிறு தொகை இருந்தது. அதையும் சந்தாவாக செலுத்தி விட்டீர்கள். அப்பொழுது அந்த இளைஞர் கூறினார்: நான் அவரிடம் கூறினேன்; இறைவனின் அருளினால் நான் ஒரு நம்பிக்கை கொண்ட நபர் ஆவேன். ஆகையால் பதற்றம் அடைய வேண்டாம்; அல்லாஹ்வே நமக்கு உதவி செய்வான்; மேலும் அவனுடைய வழியில் வழங்கியது ஒருபோதும் வீணாகுவதில்லை. கூறுகின்றார்கள்:

அடுத்த நாளே அவர் வேலைக்கு சென்றார். நீண்ட காலமாக நிலுவையில் இருந்த அந்த அனைத்து பணமும் அவருக்கு கிடைத்தது.மேலும் மாலையில் வீட்டிற்கு வந்தார். அதை கொடுத்தபோது மக்கள் வியப்பில் ஆழ்ந்து விட்டனர்.

எவ்வாறு அல்லாஹ் இவ்வளவு விரைவாக தன்னுடைய அருளை புரிகின்றான் என்று பாருங்கள்!

இன்று உலகத்தின் மீது நாம் நம்முடைய பார்வையை செலுத்தினோம் என்றால், இஸ்லாத்தின் போதனைக்கு ஏற்றவாறு உண்மையான முறையில் எந்த ஒரு அமைப்பு ஜமாஅத் என்ற அடிப்படையில் செலவு செய்கின்றதோ அது அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே ஆகும். அது அல்லாஹ்வுடைய திருப்தியை பெறுவதற்காக செலவு செய்கின்றது. அல்லது தியாகம் செய்கிறது. எஞ்சிய உலகம் என்ன செய்கின்றதோ அது ஒரு சாதாரண விஷயமாகும். மேலும் உலகம் விளையாட்டிலும் மேலும் உள்ளத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவதிலும் மூழ்கி இருக்கின்றது. பல்வேறு விதமான பித்அத்துகளும், சடங்குகளும் முஸ்லிம்களிடத்தில் ஆட்கொண்டுள்ளன. அவை உலக சடங்குகளாக உள்ளன. திருமண நிகழ்ச்சிகளில் பகட்டாக அளவில்லாமல் செலவு செய்யப்படுகின்றது. (குத்பா பேருரை, ஜுன் 06,2009)

ஆகையால் இன்று அஹ்மதிகள் ஒரு வகையில் ஒன்று திரண்டதனால் சிறந்த சமுதாயமாக அழைக்கப்படுகின்றார்கள். மேலும் இது அவர்களுடைய பொறுப்பாகும். அதாவது நல்ல விஷயங்களுக்கான கட்டளைகளையும் வழங்குதல் மேலும் தீய விஷயங்களில் இருந்து தடுத்தல் மேலும் இவை அனைத்தும் எப்பொழுது நடக்கும் என்றால் அவர்கள் தங்களுடைய செயல்களும், அதற்கு ஏற்றவாறு இருக்க வேண்டும். மேலும் எப்பொழுது இறைவன் மீது உறுதியாக நம்பிக்கை இருக்க வேண்டும்.




மேலும் அந்த நன்மைகளை பரப்புதல் மேலும் தீமைகளை தடுத்தல் போன்ற விஷயங்களில் لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰی تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ என்ற வசனத்திற்கு ஏற்ப தியாகத்தின் ஆர்வம் இருக்க வேண்டும். பெரும் நோக்கத்தை அடைவதற்காக தியாகங்கள் செய்துதான் ஆகவேண்டும். அதற்கு ஏற்றவாறு இறை வணக்கங்களின் உயர்தரத்தை நிலை நாட்ட வேண்டும். மேலும் தங்களுடைய செல்வத்தை தூய்மைப்படுத்த வேண்டும்.

சூரா ஹஜ்ஜில் அல்லாஹ் இந்த கருத்தை இவ்வாறு கூறுகின்றான்:

اَلَّذِیۡنَ اِنۡ مَّکَّنّٰہُمۡ فِی الۡاَرۡضِ
اَقَامُوا الصَّلٰوۃَ وَ اٰتَوُا الزَّکٰوۃَ
وَ اَمَرُوۡا بِالۡمَعۡرُوۡفِ وَ نَہَوۡا عَنِ
الۡمُنۡکَرِ ؕ وَ لِلّٰہِ عَاقِبَۃُ الۡاُمُوۡرِ

பொருள்: (நாட்டைத் துறந்து சென்ற முஸ்லிம்களாகிய) அவர்களுக்கு நாம் உலகில் வலிமையினை வழங்கினால் அவர்கள் தொழுகையினை நிலைநாட்டுவார்கள். ஸக்காத்தும் கொடுப்பார்கள்; நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பார்கள். எல்லாச் செயல்களின் முடிவும் அல்லாஹ்விடம் உள்ளது. (திருக்குர்ஆன் 22:42)

கண்ணியத்திற்குரிய அவையோர்களே! இறை வழியில் செலவு செய்வது தொடர்பாக எண்ணற்ற சம்பவங்கள் அஹ்மதிய்யத்தின் உலகில் பரவி கிடக்கின்றன. ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் உரைகளில் நமக்கு இவ்வாறான சம்பவங்கள் கேட்க கிடைக்கின்றன. அவற்றில் ஜமாஅத் உறுப்பினர்களுடைய வியாபாரத்தில் பெருமளவில் அபிவிருத்தி ஏற்பட்டது தொடர்பான சம்பவங்களும் உள்ளன. அவர்களுடைய ஈமானிய நிலை மாறிவிட்டது. அவர்கள் இறை நேசத்தில் முன்னேறி இருக்கின்றார்கள். அவர்கள் பாதிப்பிலிருந்து தப்பித்து விட்டார்கள். எண்ணற்ற சம்பவங்கள் இருக்கின்றன. அவற்றை நேரத்தை கருத்தில் கொண்டு உங்கள் முன்பு வைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு ஈமானை வலுவூட்டக் கூடிய சம்பவம் கினிகனாகரி நாட்டுடையதாகும். முபல்லிஃக் ஸாஹிப் எழுதுகிறார்கள்:

மதிப்பிற்குரிய முஹம்மது மாரிஹா ஸாஹிப் என்ற ஓர் இளைஞர் நீண்ட காலம் தப்லீஃக்கிற்கு பிறகு இறைவனுடைய அருளினால் ஜமாஅத்தில் இணைந்தார். அவர் ஆர்கிடெக்ட் இன்ஜினியர் ஆவார். அவர் ஜமாஅத்தில் இணைந்த பொழுது கன்ஸ்டிரக்ஷன் கம்பெனியில் பணியில் இருந்தார். மேலும் சாதாரண சம்பளத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். அவருக்கு ஜமாஅத்தினுடைய பொருளாதார அமைப்பு தொடர்பாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அப்பொழுது அவர்கள் வினவினார்கள். இந்த சந்தாக்களில் மிகவும் முக்கியமான சந்தா எது? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத்

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 12- 19 JUNE 2025 Issue No. 24 & 25

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

(அலை) அவர்களுடைய காலத்திலிருந்து சந்தா வஸிய்யத் சந்தா ஆம், ஜல்ஸா ஸாலானா சந்தா போன்றவை இருக்கின்றன என்று அவர்களுக்கு கூறப்பட்டது. மேலும் சந்தா வஸிய்யத் தொடர்பாக அவர் உடனடியாக கூறினார்: நான் இன்றிலிருந்து சந்தா வஸிய்யத்தை செலுத்துவேன். முபல்லிஃக் ஸாஹிப் கூறினார்கள்: வஸிய்யத் என்ற ஓர் அமைப்பு இருக்கின்றது. அதில் இணைந்த பிறகு நீங்கள் வஸிய்யத் சந்தா செலுத்தலாம் என்றார்கள். அதற்கு , அவர் வஸிய்யத் அமைப்பில் சேர விருப்பத்தை வெளிப்படுத்தினார்கள். பிறகு அவர்கள் உயில் என்ற நூலைப் படித்தார்கள். மேலும் அதற்குப் பிறகு வஸிய்யத் செய்தார்கள். மேலும் மிகவும் நம்பிக்கைக்கு பாத்திரமாக தன்னுடைய வருமானத்தில் பத்தில் ஒரு பங்கை சந்தாவாக செலுத்த ஆரம்பித்தார்கள். வஸிய்யத்திற்கான அனுமதி கிடைப்பதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே அதுவரை தொடர்ச்சியாக வஸிய்யத் சந்தா செலுத்தி வந்தார்கள். இதற்கு சிறிது காலத்திற்குப் பிறகு மற்ற பொருளாதார அறிவிப்புகளிலும் அவர்கள் பங்கு பெற ஆரம்பித்தார்கள். பிறகு அந்த கம்பெனியை விட்டுவிட்டார்கள். சொந்தமாக தொழில் தொடங்கினார்கள். மேலும் தற்போது அல்லாஹ்வின் அருளினால் தன்னுடைய கம்பெனிக்கு முதலாளியாக இருக்கின்றார்கள்.மேலும் நாடு முழுவதும் தன்னுடைய நம்பகத்தன்மையின் காரணத்தினால் பிரபலமடைந்துள்ளார்கள். மேலும் இதன் காரணத்தினால் அவர்களுடைய வியாபாரம் நன்கு செழிப்பாகி இருக்கின்றது. மேலும் அனைவரின் முன்னிலையிலும் வெளிப்படையாக இவ்வாறு கூறுகின்றார்கள்: இவை அனைத்தும் சந்தாவின் அருட்களாகும்.

இறுதியாக என்னுடைய இந்த உரையை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பொருள் தியாகம் தொடர்பான ஒரு மேற்கோளை முன்வைத்தவாறு நிறைவு செய்கின்றேன்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

என்னுடைய நேசத்திற்குரிய நண்பர்களே! நான் உங்களுக்கு உறுதியாகவே கூறுகின்றேன்: எனக்கு இறைவன் ஓர் உண்மையான உத்வேகத்தை உங்கள் மீதான கருணைக்காக வழங்கி இருக்கின்றான். மேலும் ஓர் உண்மையான ஞானத்தை உங்களுடைய ஈமான் மற்றும் ஞானத்திற்காக எனக்கு வழங்கி இருக்கின்றான். இந்த நுட்பமான ஞானம் உங்களுக்கும் உங்களுடைய சந்ததிகளுக்கும் மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. எனவே நான் உறுதியாக நிற்கின்றேன். அதாவது நீங்கள் உங்களுடைய தூய செல்வத்தை நம்முடைய மார்க்க நோக்கங்களுக்காக உதவிக்காக வழங்க வேண்டும். மேலும் ஒவ்வொரு நபரும் எவர்களுக்கெல்லாம் அல்லாஹ் இந்த அளவிற்கு பரந்த சக்தியை வல்லமையை வழங்கி இருக்கின்றானோ அவர்கள் இந்த வழியில் ஒருபோதும் பின்தங்கக் கூடாது. மேலும் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் ஆகியோருக்கு முன்பு தம்முடைய செல்வத்திற்கு ஒருபோதும் முன்னுரிமை வழங்கக் கூடாது. மேலும் இறைவனின் தூய ஆன்மா எனக்கு வழங்கிய இந்த அறிவு மற்றும் அருள்களை எந்த அளவிற்கு என்னுடைய சக்தி இருக்கின்றதோ எழுத்துக்கள் மூலமாக ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பரப்புவேன்.

(இஸாலா அவ்ஹாம், ரூஹானீ கஸாயீன், தொகுதி 3, பக்கம் 516)

தமிழாக்கம்
மவ்லவி ஷஹாபுதீன்

* * * * * *

9- ம் பக்கத் தொடர்ச்சி...(ஏழைகளின் உரிமைகள்)

இவ்வாறு வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதாவது, வெறும் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமை மட்டும் பறிக்கப்படவில்லை. மாறாக, முதலாளிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஏனெனில், முதலாளிகளுக்கு தொழிலாளிகளைக் கொண்டே பணி வாங்க நேரிடுகின்றது. அவர்களுக்குரிய உரிமை வழங்கப்படாத போது, அவர்களோ மன மகிழ்ச்சியுடன் பணி செய்வதில்லை. அதன் தாக்கம் அந்த வேலையின் மீதும் ஏற்படுகின்றது. மேலும் இவ்வாறு முதலாளியும் தொழிலாளிகளின் உரிமைகளை பறித்து தமக்கு தாமே நஷ்டத்தை ஏற்படுத்திக் கொள்கின்றார். ஐரோப்பாவில் நான் கண்டுள்ளேன்: எந்தவொரு நபரும் நடந்து செல்வதாக பார்க்க முடியாது; அனைவரும் ஓடிக் கொண்டிருக்கின்றனர் என்று தோன்றும். 1924-ம் ஆண்டில் நான் ஐரோப்பாவிற்கு சென்றிருந்தபோது, ஒருமுறை நான் ஹாஃபிழ் ரோஷன் அலீ ஸாஹிப் (ரலி) அவர்களிடம், லண்டனில் நீங்கள் யாரையாவது நடந்து செல்வதைக் கண்டுள்ளீர்களா? என்று கேட்டேன். அங்கு ஓரிடத்தில் ஒரு கட்டடம் கட்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டோம். அதைக் கண்டபோது, எவ்வளவு வேகத்துடன் தொழிலாளிகள் பணி செய்து கொண்டிருக்கின்றனர் என்று ஆச்சரியம் ஏற்பட்டு விட்டது. நமது தொழிலாளியோ ஒரு செங்கலை தூக்க முற்படும்போதோ, கையில் அதனை சுமந்து கொண்டு ஐய்யோ என்று கூறி கூடையில் வைக்கின்றார்; பின்னர் இரண்டாவது செங்கலை தூக்குகின்றார். தான் பணி செய்கின்றேன் என்று காட்டுவதற்காக இவ்வாறு ஊதி ஊதி அதன் மீதுள்ள தூசியை அகற்றுகின்றார். இந்த தொனியில் அவர் இரண்டு மூன்று செங்கலை கூடைகளில் வைத்து விட்ட பிறகு அவர் அமர்ந்து விடுகின்றார். மேலும் கூறுகின்றார்: நான் ஒரு பீடி குடித்துக் கொள்கின்றேன் என்று கூறுகின்றார். ஆனால், இங்கிலாந்தில் இந்த விஷயம் கிடையாது. அங்கு ஒவ்வொரு நபரும் ஓடிக் கொண்டிருப்பதை காண முடிகிறது. பின்னர் எந்த கட்டடத்தைக் குறித்து நான் குறிப்பிட்டேனோ நான் சில நிமிடங்களில் உயர்ந்து விட்டதைக் கண்டேன். அதுபோன்று நமது ஊரிலோ பல மணி நேரம் ஆனாலும் கூட கட்டடம் உயர்வதை நம்மால் காண முடியாது. ஆனால் வேதனை என்னவென்றால், இந்த முறை நான் சிகிச்சைக்காக ஐரோப்பா சென்றிருந்தபோது இங்கிலாந்தும் சென்றிருந்தேன். அப்போது இங்கிலாந்து மக்களிடத்தில் சோம்பேறித்தனம் உருவாகி விட்டது எனக்கு தெரிய வந்தது. மேலும் அவர்கள் எந்த சுறுசுறுப்புடன் முன்னர் பணி செய்து வந்தார்களோ அந்த சுறுசுறுப்பு தற்போது இல்லை என்பது தெரிய வந்தது.


ஆக, ஏழைகளின் உரிமைகள் புறக்கணிக்கப்படுவதன் விளைவு இரு தரப்பிலும் தீயதாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஏழைகளிடத்தில் சோம்பல் மற்றும் வீணாக அமர்ந்திருத்தல் போன்ற பழக்கங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. செல்வந்தர்கள் தமது வியாபாரங்களிலும், தொழில்களிலும், தொழிற்சாலைகளிலும், விளை நிலங்களிலும் சரியான பொருளில் பயன் பெறுவதிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆகி கொண்டிருக்கின்றனர். எனவே ஏழைகளின் உரிமைகளை கருத்தில் கொள்வது சமுதாய முன்னேற்றத்திற்கான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வழிமுறையாகும்.

(துஃப்ஸீரே கபீர் தொகுதி 6, பக்கம் 128 - 129, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * *

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT
99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad